531

# நிஜாமே தவ்ஹீத்
# ஏகத்துவத் தூது.
## தப்லீகின் ஆறு திட்டங்கள்.



1 1 MAR 1958
MADRAS

ஆக்கம்:
...த் அப்துல் கபூர், (ரப்பானீ) காதிரீ.
...கஞ்சே சவாயீ, நாகூர்.

Q7:4
N58
111185

786

# பைகாமே தவ்ஹீத்
# (ஏகத்துவத் தூது)

★

## தப்லீகின்
## ஆறு திட்டங்கள்.

★★


ஆக்கம்:

ஜம்யிய்யத்தே குத்தாமுத்தீன்
(சன்மார்க்க சேவைக்குழு)
ஸ்தாபகரும் தலைவருமான

மௌலானா
**ஷெய்கு முஹம்மத் அப்துல் கபூர்**
ரப்பானீ (காதிரீ)

தர்பாரே கஞ்சே சவாயீ, நாகூர்.



(ஜம்யிய்யத் வெளியீடு.)


★★★

[விலை: 0-8-6.]

# உ ள் ளு ரை


| அத்தியாயம். | | பக்கம். |
|---|---|---|
| | பதிப்புரை | I |
| | முன்னுரை | III |
| | முதல் பாகம் | |
| I | தப்லீக் பதவிளக்கம் | 1 |
| | 'தப்லீக்' மொழி பெயர்ப்பு சம்பந்தப்பட்ட எச்சரிக்கை | 2 |
| | பிரிவு 2 – தற்போதைய தப்லீகின் சிறப்பு | 3 |
| | பிரிவு 3 – தீன் - தவ்ஹீத் - நுபுவ்வத் - ரிசாலத் - கலிமா - தப்லீக் - விளக்கங்கள் | 4 |
| II | தப்லீகின் முதல் திட்டம் – கலிமாவின் மஹத்துவத்தை கல்பில் குடிகொள்ளச் செய்தலாகும் | 9 |
| | பிரிவு 2 – முஸ்லிமின் முப்பெரும் மூலாதாரங்கள் | 10 |
| | பிரிவு 3 – கலிமாவின் மஹத்துவம் | 14 |
| III | தப்லீகின் இரண்டாவது திட்டம் தொழுகை | 19 |
| | பிரிவு 2 – தொழுகையைக் கைவிடுவதின் துன்பங்கள் | 21 |
| | தொழுகையின் பலாபலன்கள் | 24 |
| | பெருமானாரின் இறுதி உபதேசம் | 24 |
| | தொழுகை ஸ்தல மாண்பு | 25 |
| IV | தப்லீகின் மூன்றாவது திட்டம் இல்மு, ஜிக்ரு | 25 |
| | ஜிக்ரின் சிறப்பு | 29 |
| | இரண்டாம் பாகம் | |
| V | தப்லீகின் நான்காவது திட்டம்—இக்ராமுல் முஸ்லிம் திட்ட விளக்கம் | 31 |
| | இத்திட்டத்தின் விசேஷ மஹத்துவம் | 32 |
| | சிறந்த இஸ்லாம் | 35 |
| | உம்மத்தீயின் இலட்சணங்கள் | 35 |
| | இஸ்லாமிய சமுதாயம் | 36 |
| | முஸ்லிம் சமுதாய சீர்திருத்த சாதனம் | 39 |
| | பிரிவு – 2 தப்லீகின் மூலாதார திட்டம் | 40 |
| | 'கஷ்த்து' ஒரு புனித பணி | 42 |
| VI | தப்லீகின் ஐந்தாவது திட்டம் — இக்லாஸுந்நிய்யத் | 45 |
| | 'இக்லாஸ்' வாழ்க்கையின் பலதுறைகளில் அடைவதேப்படி | 47 |
| VII | தப்லீகின் ஆருவது திட்டம் 'தப்ரீகே-வக்து' | 50 |


ARCHIV

# பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்.

## பதிப்புரை.

அல்ஹம்துலில்லாஹில் – மலிகில்–மன்னான் – வஸ்சலாத்து வஸ்சலாமு – அலா – சையிதினா – வ – மௌலானா முஹம்மதின்-சையிதில் இன்ஸிவல்ஜான் – வ - அலா – ஆலிஹிவ சஹ்பிஹி நுஜூமுல் ஹுதாத்திவல் – ஈகான் –

1. ஜம்யிய்யத்தே குத்தாமுத்தீன் (சன்மார்க்க சேவைக் குழு) சார்பாக இவ்வெளியோனுல் சன்மார்க்க, தப்லீக் சம்பந்தமான பிரசுரங்கள் வெளியாக்கப்படுவதை ஜில்லா தப்லீக் ஜமாஅத்தினர் விசேஷமாகவும், தென்னாட்டு முஸ்லிம்கள் பொதுவாகவும், விளங்கியுள்ளனர். சென்ற (**1376**) சபர்மாத வெளியீடாக "**தப்லீகின் ஆறு திட்ட ஆதாரங்கள்**" என்ற பிரசுரம் வெளியாக்கப்பட்டது. நாற்பது ஹதீதுகளின் கோர்வையாக வெளியாக்கப்பட்டதால் அதில் மூன்று திட்டங்களை மட்டும் முதல் பாகமாக பிரசுரித்து அடுத்த மூன்று திட்டங்களையும்: ஹதீதுகளின் ஆதாரத்துடன் இரண்டாவது பாகமாக பிரசுரிப்பதாக வாக்குறுதி செய்யப்பட்டிருந்தது.

2. இவ்விரண்டாவது பாகமும். பூர்த்தியற்ற நிலையில் இடையில் பிரசுரிக்கப்பட்டது. பூர்த்தியாக வெளிப்படுத்த வேண்டுமென சகோதர முஸ்லிம்களின் கோரிக்கைகள் அடிக்கடி ஏற்பட்டுக்கொண்டிருந்தன. இறுதியாக. ஏகபராபரனாகிய அல்லாஹ் ஜல்லஷான ஹுவதஆலா, "**தப்லீகின் அகில உலக அருட் கொடையாகிய ஹஜ்ரத் ஜீமௌலானல்ஹாஜ் முஹம்மத் யூசுப் சாஹிப் தெஹ்லவி** (தப்லீகின் தந்தையான ஹஜ்ரத் மௌலானா இல்யாஸ் (ரஹ்) அவர்களின் ஏக புத்திரர்) **அவர்களின் தமிழ்நாட்டு ,விஜய வைபவ ஞாபகார்த்தமாக**, இப்பிரயாசையைப் பூர்த்தியுறச் செய்து, இதை சம்பூரண வெளியீடாக. பிரசுரிக்க அருட்புரிந்தான்.

3. இப்பிரசுரத்தில் தப்லீக் சம்பந்தப்பட்ட சில விசேஷ கருத்துரைகள் முதல் அத்தியாயத்திலும், இரண்டு மூன்று

நான்கு அத்தியாயங்களில், முதல் வெளியீட்டில் (முன்தகபுல் அக்பார் மின் கலாமி சய்யிதில் அப்ரார்) பிரசுரிக்கப்பட்ட நாற்பது ஹதீதுகளைக் கொண்ட முதல் மூன்று திட்டங்களும்; ஐந்து, ஆறு, ஏழு, அத்தியாயங்களில், அடுத்த மூன்று திட்டங்களும் சவிஸ்தாரமாக விளக்கப்பட்டுள்ளன.

4. **சுருங்கக் கூறுமிடத்து, தமிழ் பாஷையிலேயே, தப்லீகின் தத்துவார்த்தங்களையும் தப்லீகின் மஹத்துவத்தையும், முக்கியத்துவத்தையும், விளக்கும் சில விசேஷத்துவங்களும், பிரத்தியேக அம்சங்களும், பூண்ட முதல் நூலாக இவ்வெளியீடு அமைந்துள்ளது.**

5. சர்வ வல்லோனாகிய அல்லாஹ் (ஜல்) தனது பஜ்லு ரஹ்மத் தென்னும் அருள் அனுக்கிரஹத்தைக் கொண்டு, தமிழ் முஸ்லிம்கள் அனைவரும் இதைக் கொண்டு, பலனுற்று, இகபர ஈடேற்றமுற, இவ்வெளியீட்டை அங்கீகரித் தருட்புரிவதுடன், இவ்வெளியோனையும், இதன் பயனால் சர்வலோக **ரட்சகர் சையிதினா முஹம்மதுர் ரசூலுல்லாஹி சல்லல்லாஹு அலைஹி வசல்லம அவர்களின்** வாக்குறுதியாகிய **"குன்து-லஹு-ஷாபி அன்-வ-ஷஹீதா"**, வை அடையும் அருகதையுற்றவனாக்கி, மறுமையின் மாபெரும் பாக்கியங்களாகிய **"லிகா"** வென்னும் திருச்சந்திப்பையும் **"ருஃயத்"** தென்னும் திருத் தரிசனத்தையும் தந்தருட் புரிவானாக.

ஆமீன் - ஆமீன் - யாரப்பல் ஆலமீன்
பி - ஹுர்மத்தி - சய்யிதில் முர்சலீன்

கதபஹு அஹ்கருல் இபாத்

| | |
|---|---|
| **தர்பாரே<br>கஞ்சே சவாயீ<br>நாகூர்.<br>22—1—'58.** | **ஷெய்கு முஹம்மத் அப்துல் கபூர்,<br>(ரப்பானீ) காதிரி.** |

# பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்.

## முன்னுரை.

சர்வ புகழும், எகவல்லோனும் சர்வலோக இரட்சகனு மாகிய, அல்லாஹ் ஜல்லஷான ஹுவத ஆலாவுக்கே உரித் தாகுக, சாந்தியும் சமாதானமும் சத்திய சற்குண சீலருன சர்வ ரேகாயினுத் சையிதினுவ மௌலானு முஹம்மதுர் ரசூலுல் லாஹ் (ஸல்) அவர்கள் பேரிலும், அவர்கள் பேரில் விசுவாசங் கொண்டு, சுத்த சத்திய தீனுல் இஸ்லாத்தை இக்குவலயத்தில் நிலை நாட்டி வைத்த அன்னாரின் தோழர்கள் பேரிலும் மேலும் அன்னாரின் குடும்பத்தினர், கிளைஞர் யார்வரின் பேரிலும் உண்டாவதாக:

2. மனுவர்க்கம் பொதுவாகவும், முஸ்லிம்கள் விசேஷ மாகவும், அறியாமையிலும், அந்தகாரத்திலும் ஆழ்ந்து ஆத்ம பிரகாசம் இழந்து, சிருஷ்டி லட்சியத்தைப் புறக்கணித்து, மிரு கத்துவத்தைக் குறிக்கோளாகக் கொண்டு இவ்வையகத்தே உயிர் வாழும் இக்காலத்தில், முஸ்லிம் ஜீவியலட்சியத்தை அறி வுறுத்தி, அல்லாஹ்வுக்கும் அடியானுக்கும் உள்ள சம்பந்தத்தை உணர்த்தி, இம்மை மறுமையின் மர்மங்களை விளக்கி, சத்திய சன்மார்க்க ஜீவிய அம்ஸங்களை முஸ்லிம்களிடையே உயிர்பித்து நிலைநாட்டிவரும் இப்புனித ''தப்லீக்'' கைங்கரியம் இப்புவியில் அல்லாஹ்வின் அரும்பெரும் அருட்கொடையாகவும், ரஹ்மத்தா கவும், விளங்குகிறதென்பது ஒருவரும் மறுக்கமுடியாதஉண்மை என்பதை முஸ்லிம் உலகம் இன்று உணர்ந்துள்ளது.

3. அகில உலக முஸ்லிம்களிடையே ''தப்லீகு'' ஆற்றி வரும் அரும்பெரும் தொண்டின் விளைவாக ஒவ்வொரு பகுதியி லும் ஆயிரக்கணக்கான மாந்தர் ஆத்மிக வளர்ச்சி யுள்ளவர்க ளாயும், சன்மார்க்கப் புத்துணர்ச்சி பெற்றவர்களாயும் திகழ் வதை, மனுவர்க்கம் இன்று கண்ணுற்று, அனைவரும் இவ்வடிப் படையை ஏற்றும், கடைபிடித் தொழுகியும், இகபர ஈடேற்றத் திற்குரியவர்களாக வேண்டுமென முற்பட்டுக்கொண்டிருக்க, இவ்வரும் பெரும் அருட் கொடைகளையும், பாக்கியங்களையும்

அருளப்பெற்ற அருமை நாயகம் முஹம்மத் முஸ்தபா ரசூல்(ஸல்) அவர்களின் உம்மத்துகளாகிய நம்மோரின் பெரும்பான்மை, இன்னும், அறியாமையிலும், அந்தகாரத்திலும் ஆசிரத்தைப் பற்றிய அலட்சிய வாழ்க்கையிலும் ஆழ்ந்துகொண்டு போய்க் கொண்டிருக்கிறது. இதின் மூலகாரணங்கள் முஸ்லிம்களின் பெரும்பான்மையின் சன்மார்க்க அஞ்ஞானமும், அத்துடன் சீர் கெடுக்கும் சமுதாய சூழ்நிலையும் சற்குணங்களை சீரழியச்செய்து, பாதகங்களைப்பரத்தும் நாகரீக ரீதிகளும், நவீன கலாசாரங் களுமே யாகும். ஆகவே இக்கோர நிலையில் இவ்வாத்மீக வீழ்ச்சியுற்றுப் போகும் இச்சமுதாயத்தை, சன்மார்க்க பிரசா ரங்கள் மூலமும், நலனைப்போதித்து பரத்துவதின் மூலமும் சன் மார்க்க கலைகள் மிகுதமாகப் புகட்டப்படுவதின் மூலமும், நீதி நெறியில் நிலைபெறச்செய்வது ஒவ்வொரு சன்மார்க்க அபிமானி யின் பேரிலும் ஏற்பட்ட, தவிர்க்கமுடியாத அத்யாவசிய கடமை யாகும். இதுவே முஸ்லிமின் ஜீவிய லட்சியமாக யிருக்கவேண் டும். இப்பொறுப்பை நிறைவேற்றவே இவன் அல்லாஹ்வினுல் சிருஷ்டிக்கப்பட்டான். இந்நோக்கத்துடன், இவ்வெளியீடு ஏழு அத்தியாயங்களைக் கொண்டதாகவும், போதிய விளக்கங்களு டனும் பிரசுரிக்கப்பட்டுள்ளது

எல்லாம் வல்ல ஏகபராபரனுகிய அல்லாஹ் ஜல்ல ஷானஹு, வதஆலா, எம்மிறைவள்ளல் சய்யிதினு முஹம்மதுர் ரசூலுல்லாஹி சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களின் பொருட்டால், இவ்வெளியோனின், இச்சிறு முயற்சியை, தனது பேரானுக்கிரஹத்தைக் கொண்டு, அங்கீகரித்து, இதன் பிரசுர லட்சியத்தை நிறைவேற்றி, மக்களிடையே இத்திருப்பணியைப் பரத்தி, நம்மனைவோரையும், இப்புனித சேவையில் பரிபூரண மாக ஈடுபடவேண்டுவதற்குரிய அறிவு, ஆற்றல், ஆயுள்யாவும் தந்தருட்புரிவானுக: **ஆமீன். ஆமீன்–யாரப்பல் ஆலமீன்.**

பிஹுர்மத்தி சய்யிதில் முர்சலீன் - (ஸல்).

கதபஹு
அஹ்கருல் இபாத்,

தர்பாரே,
கஞ்சே சவாயி,
**நாகூர்.**
22—1—'58.

**ஷேக் முஹம்மத் அப்துல் கபூர்,**
**(ரப்பானி) காதிரீ.**

# பிஸ்மில்லாஹிற் றஹ்மானிர் ரஹீம்.

## அத்தியாயம் I

### தப்லீக் பத விளக்கம்.

"தப்லீக்" என்னும் அரபிப்பதம், "எத்திவைத்தல்" "அடையச்செய்தல்" எனப் பொருள்படும். இது பலக்" பலாக்" புலூக்" என்னும் அரபிமூலத்தைச் சார்ந்தது. **"பல்லக"**வென்னும் இறந்தகால வினையினின்று இலக்கண ரீதிப்படி ஆக்கப்பட்ட "மஸ்தர்" (பண்புவினை) **"தப்லீக்"** ஆகும். சாதாரணமாக "பெண் பருவமடைந்து விட்டால்" பாலிக் ஆகிவிட்டாள், "புலூக்" அடைந்துவிட்டாள், எனக் கூறுவதை நாம், பன்முறை செவியுறுகின்றோம். ஓரிடத்தைவிட்டு, மற்றொரு இடம் சேர்ந்து விடுவதற்கும் "பலக்" என்னும் பதம் உபயோகிக்கப் படுகின்றது. ஆகவே "அடைந்து விடுவதற்கும்" "எத்தி விடுவதற்கும்" புலூக் என்றும், "எத்திவைப்பதற்கும்" அடையும்படி செய்வதற்கும். "தப்லீக்" என்றும் கூறப்படும். அரபி அகராதிப் பொருள்படி "தப்லீக்" என்னும், பதத்தை எத்திவைக்கக் கூடிய எச்செயலை குறிப்பதற்கும் பிரயோகப்படுத்தப்பட்ட போதிலும், "இஸ்லாமிய" அடிப்படையில், இப்பதம் சத்திய சன்மார்க்கஅம்ஸங்களை எத்திவைக்கும் செயலைக்குறிப்பதற்கே விசேஷமாக உபயோகப்படுத்தப் படுகிறது. தெளிவாகக்கூறுமிடத்து அல்லாஹ், ரசூலின் ஏவல், விலக்கல்களை மனுவர்க்கத்திடையே எத்தி வைக்கும், புனித கைங்கர்யமே "தப்லீகின்," சீரான விளக்கமாகும்.

## "தப்லீக் மொழிபெயர்ப்பு சம்பந்தப்பட்ட

## எச்சரிக்கை!"

---

2. தமிழ், சம்ஸ்கிருத பாஷைகளில் இப்பதத்தை "பிரசார" மென மொழிபெயர்க்கின்றனர், பிரகாசமென்னும் வடமொழி தமிழில் சாதாரணமாக வழங்கப்பட்டு வந்தாலும், "தப்லீக்" என்னும் அரபிப்பதத்தின் அத்தனை ஆழ்ந்த கருத்துகளையும், விசேஷத்துவங்களையும், கொண்ட பதமல்ல. ஆதலால், இப்பதத்தை "தப்லீக்" பூரண மொழிப் பெயர்ப்பாகக் கொள்ளலாகாது. பிரசாரமென்பது வட மொழியில் "பரத்துதலெனப்" பொருள்படும். சன்மார்க்க (தீனுல் இஸ்லால்) அம்ஸங்களைப் பரத்தும், அடிப்படையில் பிரசார மென, மொழி பெயர்க்கப்பட்ட போதிலும், தப்லீகின் தாத்பரியங்கள் அனைத்திற்கும் தகுதியுற்ற சொல்லல்லாததால், இதை மொழிபெயற்புகளில் தவிர்ப்பது உசிதமாகும். இதேபோலவே ஆங்கில மொழிபெயர்ப்புகளில் காணப்படும் "ப்ராபகேஷன்" என்னும் சொல்லுமாகும். இச்சொல்லையும் தவிற்பது மேலாகும். சாதாரணமாகவே "பிரசார" மெனத் தமிழிலும் "பராபகேஷன்" என ஆங்கிலத்தில் மொழிப் பெயர்ப்பது தவிர்க்கதக்கதாயிருக்க தற்போது தரணியின்பேரில் தழைத்தோங்கிவரும் "தப்லீகை" (ஹஜ்ரத் மௌலானா இல்யாஸ் (ரஹ்) அவர்களின் ஆறு திட்ட அடிப்படையில் பணியாற்றப்படும்)க் குறிப்பதற்கு மேற்கண்ட பதப் பிரயோகங்கள், அடிப்படைக்கே முரணானதுமல்லாமல், ஹானி விளைவிப்பது மாகும். ஆகவே முஸ்லிம் சகோதரர்கள் "தப்லீகை" விளக்குங்கால் இப்பதங்களை உபயோகித்தலாகாது என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும்.

## பிரிவு II.

**தற்போதய தப்லீகின் சிறப்பு** (மௌலானா இல்யாஸ்) அவர்களின் ஆறு திட்ட அடிப்படையில் **ஆற்றப்படும்**

**தப்லீக் திருப்பணி.**

3. அடிப்படைக்கே முரணானது எனக்கூறுவதின் காரணம் ''தப்லீக்'' வெறும் பிரசாரமட்டுமல்ல. ஹஜ்ரத் மௌலானாஇல்யாஸ்(ரஹ்)அவர்கள் ''தப்லீகின்'' பொருப்பு களை நிறைவேற்றுவதில், நபிமார்கள் கண்ணுங் கருத்து மாக வைத்திருந்த ''அனுஷ்டான அம்சத்தை'' மூலாதார திட்டங்களிலே புகுத்தி அமைத்துவிட்டபடியால், மேற் கூறப்பட்ட ஆறுதிட்ட அடிப்படையில், ஆற்றப்படும், இத்திருப்பணி, வெறும் பிரசாரமட்டுமின்றி, அனுஷ்டான பூர்வமான புனித கைங்கரியம் என்பதை ஒவ்வொருவரும் விளங்கிக்கொள்ளவேண்டும். சொல்லைவிட செயலே இதன் குறிக்கோள். ஆகவே உபதேசங்கள், உபன்யாசங்களைக் குறைத்து சன்மார்க்க அனுஷ்டானங்களில் ஈடுபடுத்தி விடுவதுதான் இதன் மூல லட்சியம். இச்சேவை புரியுங் கால், அல்லாஹ்வின் பேரானுக்கிரஹமாக அமைந்துள்ள இவ்வாறு திட்டங்களையும்அடிப்படியாகக்கொண்டு, நம்மில் அவ்வம்சங்களை உண்டாக்கி, பிறரிலும் விளையச்செய்து ''உம்மத்துடைய'' ''இஸ்லாஹ்'' (சீர்திருத்தம்) அளவில் பாடுபடவேண்டும். நம்மை நாம் சீர்திருத்திக்கொள்வ தேன்ற அடிப்படையில் இத் திருப்பணியில் ஈடுபடவேண் டும். நம்மை நாம் சீர்திருத்திக்கொள்வதேன்ற அடிப்படை யில் இத் திருப்பணியில் ஈடுபடவேண்டுமேயல்லாது, பிற ரைச் சீர் திருத்தச் செல்கின்ரேம், அல்லது முயல்கின் ரேம், என்ற சிந்தனை ஏற்படலாகாது. இவ்வாறு ஒவ் வொரு ''உம்மத்தி''யும் தன்தன்னை பொருத்தவரையில் இக் கருத்துப்பூண்டவருக இப் புனிதச் சேவையில் ஈடுபடுங்

கால், தனித்த முறையில் ஒவ்வோருவரும் சீர்திருத்த முறும் இயல்பு உடையவராகி, நாளடைவில் பலரும் சீர்த் திருத்த முறுங்கால் சமுதாய சீர்திருத்தம் (உம்மத்துடைய இஸ்லாஹ்) ஏற்படுகின்றது. இத்தகைய மகோன்னத அம் ஸங்களுடைய இக் கைங்கரியத்தை வேறும் பிரசாரமாக மட்டும் கோள்வது கூடாது. இக்காரணத்தினுல்தான் இதை பிரசாரமேன்றே, "பிருபகேஷன்" என்றே, மோழிபேயர்ப் பது, அடிப்படைக்கே முரணனதேன முஸ்லிம் பேருங் குடி மக்களுக்கு போதுவாகவும், முபல்லிகீன் (தப்லிகீன் சேவையில் ஈடுபட்டுள்ளோர்) களுக்கு விசேஷமாகவும் எச்சரிக்கை செய்யப்படுகிறது.

---

## முதல் அத்தியாயம் - பிரிவு III

## தப்லீக் விளக்கம்.

---

### தீன் - தவ்ஹீத் - நுபுவ்வத் - ரிஸாலத் - கலிமா - தப்லீக் விளக்கங்கள்.

---

சன்மார்க்க அம்சங்களே, மக்களிடையே எத்தி வைக்கும் பரத்திவைக்கும் சேவை, தப்லீக் என்பதை விளங்கிக்கோண்டோம். **சன்மார்க்கம் என்பது யாது? மனிதவர்க்கம் எவ்வாறு, தனது இம்மையை கடத்த வேண்டும், எம்முறைகளே, ஒழுக்கங்களே லக்ஷ்யமாகப் பூண்டு ஒழுகவேண்டும், என மனுவர்க்கமனைத்தையும்**

சிருஷ்டித்து, இவ்வர்க்கத்தை, சர்வசிருஷ்டிகளனைத்தைவிட சிரேஷ்டமானதாக்கி. அதன்வாழ்க்கைக்குரிய சர்வ சாதனங்களையும் சிருஷ்டித்துக்கொடுத்த, சர்வ சிரேஷ்டமான ஏகவல்லோனாகிய அல்லாஹ் ஜல்லஷான ஹுவத ஆலா, தனது திருச்சித்தம் திருப்பொருத்தத்திற்குரிய மார்க்கத்தை நிர்ணயித்துக்கொடுத்தானே அம்மார்க்கம்தான் சன்மார்க்கம் என்பது. இதைத் தான் அரபி மொழியில் **"தீன்"** என்கிறோம். இத்தகைய தீனே **இஸ்லாமாகும்.** ஆகவே சன்மார்க்கத்தின் (இஸ்லாத்தின்) அடிப்படை, அல்லாஹ் வின் திருச்சித்தத்திற்குரியமுறைகள் ஒழுக்கங்களை, அனுஷ்டித்த வண்ணம் உலகவாழ்க்கையை கடத்துவதாகும். இம்முறைகளையும், அனுஷ்டானங்களையும் இறைப் பொருத்தத்திற்குரிய நடைமுறைகளையும் மனுவர்க்கத்தளவில், '**அல்லாஹ்**' மனுவர்க்கத்திலிருந்து தனனல் தேர்ந்தெடுக்கப்பட்ட சில நல்லடியார்கள் மூலம் எத்திவைக்கிருன். அந்நல்லடியார்கள் அல்லாஹ்விளுல் தேர்ந்தெடுக்கப்படுவதற்குரிய சர்வயோக்யதாம்சங்கள் அல்லாஹ்விளுலேயே, பிறப்பைக்கொண்டே, அருளப்பட்டவர்களாயிருப்பதுமன்றி, பிறப்புக்குப்பின், பருவமடைந்து, தனது தேர்தலையடையும் வரை, அல்லாஹ்விளுல் பல்வேறு அனுபோக பூர்வமான கட்டங்களி லீடுபடுத்தப்பட்டு, பக்குவமுற்றவர்களாய் விளங்குகின்றனர், இத்தகைய ஆத்மீக பக்குவமுற்ற, இயற்கையிலேயே வழிகேட்டைவிட்டு அப்புறப்பட்ட ஸ்வாபமுடையவர்களாகச் சிருஷ்டிக்கப்பட்ட, நல்லடியார்கள் மூலம்தான், அல்லாஹ், தனது தூதையும், திருச்சித்த அம்சங்களையும் மனுவளவில் எத்திவைக்கின்ருன். இத்தகையோரே **"நபி"** என அல்லாஹ்விளுலேயே நாமம் சூட்டப்பட்டுள்ளனர். வேதங்கள் அருளப்பட்டவர்களாயின், அன்னுரை, "**ரசூல்**" என கூறப்படும், இந் **"நபிமார்கள்"** "**ரசூல்மார்கள்**" இறைத்தூதை, மறை

மூலம், எத்திவைப்பதுடன், இறைப்போருத்த அம்சங்களை, அனுஷ்டான பூர்வமாக தனது வாழ்க்கையின் பல்றேு துறைகளில், நிரூபித்துக் காட்டுகின்றனர். ஆகவே சன் மார்க்கம் (தீன்) என்பது, இரண்டு அடிப்படைக் கோண்ட தாயுள்ளது. ஒன்று அல்லாஹ்வின் திருப்போருத்த அம் சங்கள், அவனுல் நிர்ணயிக்கப்பட்ட இம்மையின் இலட்சி யங்கள், இதைத் "**தவ்ஹீத்**" என்பர். மற்ருென்று, எந்த நபி, அல்லது ரசூல்மூலம், மேற்கண்ட இறைப் போருத்த அம்சங்கள், மனுவர்க்கத்தளவில் எத்திவைக்கப்பட்டதோ அந்நபியின் அனுஷ்டான பூர்வமான வாழ்க்கை, நடை முறை, இதை "**சுன்னத்**" என்பர். அந்நபியினுடைய "**நுபுவ்வத்து**", "**ரிசாலத்து**" எனவும்கூறப்படும். ஆகவே சன்மார்க்கத்தின் மற்ருெரு அடிப்படை, "**ரிசாலத்து**" "**சுன்னத்தாகும்**". ஒன்று அல்லாஹ்வின் ஏவல்விலக்கல் மற்ருென்று, அவைகளை எடுத்தோதிய நபி அல்லது இர சூலின்நடைமுறை, அன்ஞரின் ஏவல்விலக்கல். ஆகவே சன்மார்க்கத்தின் (தீனின்) அடிப்படையான இவ்விரண்டை யும் ஹிருதயத்தில் இறுத்தாட்டி அதன்படி வாழவேண்டி, இலகுவான ஒருதிருமோழியில் இவ்விரு அம்சங்களும் அமைக்கப்பட்டு அதை சன்மார்க்க அஸ்திபாரமாக நிர்ண யிக்கப்படுகின்றது. இத்திருமோழியே "**கலிமா**" வேனக் கூறப்படுகின்றது. இக்"கலிமாவில்", மேல் விளக்கப்பட்ட சன்மார்க்க இரண்டு அம்சங்களையும் ஒருங்கே போருத்தப் பட்டிருப்பதைக் காண்கின்ருேம், ஒன்று "**தவ்ஹீத்**" உடையபகுதி மற்ருென்று "**ரிசாலத்துடைய.**" (சுன்னத் துடைய பகுதி இவ்விரண்டையும்கோண்ட ஏகத்துவ திரு மோழியாகிய "**கலிமாவின்**" பேரில் மனதைக்கோண்டு உறுதிவிசுவாசங்கோள்வது. "**ஈமானும்.**" உறுதிவிசுவாசங் கோண்டவற்றை. அனுஷ்டான பூர்வமாக வாழ்க்கையில் வேளியாக்கிவைப்பது "**இஸ்லாமும்**" மாகும். இஸ்

லாத்தின் அடிப்படையாகிய "**லாஇலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் "ரசூலுல்லாஹ்**" என்ற திருக்கலிமாவில் இவ்விரண்டையும் காண்கின்றோம். முந்தினது ஏகத்துவ (தவ்ஹீத்) அம்சம். இரண்டாவது, தீர்க்க தரிசுத்துவ (ரிசாலத்) அம்சம். ஆகவே சன்மார்க்க அம்சங்களை எத்தி வைக்கும் சேவை (தப்லீக்) என்பது, அல்லாஹ்வுடைய வும், அவனது திருத்தூதருடையவும், ஏவல், விலக்கல் களை, மனுவர்க்கத்தளவில் எத்திவைத்து, நபியினுடைய நடைமுறையைக் கடைபிடித்தொழுகச் செய்து, அல்லாஹ் வின் திருப்பொருத்தத்திற் குரியவராக்கி வைப்பதே, "தப்லிகு"ஆகும். இப்புனிதகைங்கர்யம் நபிமார்கள், ரசூல் மார்களின் அநந்தரம் பூமியின் பேரில் மனுவளவில் ஒப்ப டைக்கப்பட்ட அல்லாஹ்வின் அமானதம் இதை ஏற்று உறுதி விசுவாசங்கொண்டு, பொருப்புகளை நிறைவேற்றி வைப்போரே "**முஃமின்**", "**முஸ்லிம்**" என்பவர். இதை செயலாற்றுவது, இதன் அம்சங்களை நிலைநாட்டி வைப்பது, பூமியின்பேரில் உள்ள அல்லாஹ்வின் "**பிரதிநிதித்துவ மாகும்**". ஆகவே நபிமார்கள், ரசூல்மார்கள் மனுவர்க்கத் தில் முஃமினான முஸ்லிமான அல்லாஹ்வின் "பிரதிநிதிகளா வர்". அந்நபிமார்கள் பேரில் விசுவாசங்கொண்டு, அப்பொருப்புகளை நிறைவேற்றி வைப்போர், அந்நபிமார் களின் ரசூல்மார்களின் முஃமின. முஸ்லிமான "**வாரிசீன் கள்**" "**நாயிபீன்கள்**"; "**அநந்தரக்காரர்கள்** "எம்பிரான் (சல்)அவர்கள் இறுதிநபி, நபிநாதர், நபிமார்களின் முத்திரை சய்யிதில் முர்சலின் "காத்தமுன் நபிய்யீன்" ஆக. வைய கத்தே தோற்றுவிக்கப்பட்டதால், அன்னவர்களுக்கு பின், இம்மஹோன்னதத் திருப்பணியை கியாமநாள் வரை, பூமி யின்பேரில் மனுவர்க்கத்திடையே, செய்துவருவது, அன் னரின் உம்மத்தினராகிய, நமது சிருஷ்டி லட்சியமாகும். 'அநந்தரம்" மட்டுமின்றி அல்லாஹ்; நம்மைச் சிருஷ்டித்த

நோக்கமே இதுதான். (தப்லீகு சேவை.) இதன் முக்கியத் துவத்தைப்பற்றி கீழ்க்கண்ட ஹதீதுகள் அறிவுறுத்து கின்றன:

**ஹதீது 1** "உங்களில் இரு (பெரும்) அம்சங்களை விட்டுச் செல்கிறேன், அவற்றைப்பற்றிப் பிடித்தொழுகும் **வரை**, நீங்கள் நிச்சயமாக (ச்சருகி) வழிகெட்டு விடமாட்டீர் **கள்** அல்லாஹ்வின் திருமறை, (குர்ஆன்) (2) அவனது திருத்தூதரின் ஜீவிய முறை (சுன்னத்).

**ராவி**: மாலிக் இப்னு அனஸ் (ரலி)

**நூல்**: "முவத்தா"

**ஹதீது 2** "உங்களில் எனக்குப்பின் வாழ்வோர்" பற்பலப்பிணக்குகளையும், பேதங்களையும் கண்ணுறுவர். (அத்தருணத்தில்) என் நடைமுறையையும் எனது. நீதி நெறியில்தரிபடுத்தும் நேர்வழியுற்ற பிரதிநிதிகளின் (குலபா) நடைமுறையின் பேரிலும் (தரிபட்டு) இருப்பது உங்களின் பேரில் கடமையாகும். அதை உறுதியாகப்பற்றிப்பிடித் தொழுகுவீருக! அதை கடைவாய்ப் பற்களைக்கொண்டு கவ் விப்பிடித்துக்கொள்வீருக! (அவ்வளவு உறுதியாக தரிப்பட் டிருப்பீருக) நவின முறைகளை விட்டும் அகன்றிருப்பீருக! நிச்சயமாக ஒவ்வொரு நூதனமும். நவின அனுஷ்டானங் களும் வழிகேடாக யிருக்கும்.

**ஹதீது 3** "இருதிகாலத்தில் (கியாம நெருக்கத்தில்) அனுசார அக்ரமஸ்தர்களும், பொய் புறட்டர்களும்முற்பட்டு நீங்களும், உங்கள் மூதாதைகளும் கேட்டிருத ஹதீதுகளை (சமாச்சாரங்களை)உங்களுக்கு எடுத்துரைப்பர். அவர்களை விட்டும், உங்களை பாதுகாத்துக்கொள்ளுங்கள். (அவ்வாறு இருந்தால்) அவர்கள் உங்களை வழிகெடுக்கவும் பித்துனு (சச்சரவு, புரட்சி)க்களில் ஈடுபடுத்தவும் முடியாது.

**ராவி** ஹஜ்ரத் அபுஹுரைரு (ரலி)

**கிரந்தம்: முஸ்லிம்**

## அத்தியாயம் II

### பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்

### திட்டம் I தப்லீகின் முதல் திட்டம் கலிமாவின் மஹத்துவத்தை கல்பில் குடிகொள்ளச் செய்தலாகும்.

இஸ்லாமின் மூலாதாரம் ஈமானும், ஈமானின் மூலாதாரம், மூலப் பிரமாணமாகிய திருக்கலிமா "லாயிலாஹ இல்லல்லாஹு, முஹம்மதுர் ரசூலுல்லாஹ்" ஆகும். (விசுவாசி) முஃமின் எந்த அளவு இதன் மஹத்துவத்தை ஹிருதயத்தில் குடிகொள்ளச் செய்து, யகீனில் (உறுதி) விருத்தியடைகின்ருனே. அந்த அளவு "ஈமானில்" பரிபூரணத்துவமடைகின்ருன். இப்பரிசுத்தத் திருமொழியில் இரண்டு அம்சங்கள் உள. முந்தினது ஏகத்துவ அம்சம். இரண்டாவது தீர்க்கதரிசித்துவ அம்சம். (தவ்ஹீத்-ரிசாலத்து) இவ்விரு அம்சங்களின் மஹத்துவத்தை கல்பில் இறுத்தாட்டிக் கொள்வதே ஈமானின் பரிபக்குவத்திற்குரிய அறிகுறியாகும். ஆகவே ஒவ்வொரு முஃமினும் (விசுவாசியும்) இதில் தேண்டித்து, ஆராய்ச்சி செய்து, யகீனில் (உறுதி) பூர்த்தியாகவேண்டி **கலிமாவின் மஹத்துவத்தைக் கல்பில் (மனதில்) குடிகொள்ளச் செய்வதை, தப்லீகின் முதல் திட்டமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.** ஈமானின் காரணமாக முஃமினுக்குள்ள சலுகைகளும், அவன் அடையும் உச்ச நிலையும், கீழ்க்கண்ட ஹதீதுகள் தெளிவாக்குகின்றன.

**ஹதீது 1.** "நிச்சயமாக அல்லாஹ்வைத் தவிர வணக்கம் வழிபாட்டிற்குரிய நாயன் வேறில்லை" என உறுதிகொண்டு அறிந்தவனுக, எவன் மவுத்தாகிவிடுகின்ருனே, அவன் சுவர்க்கம் புகுவான்.

(ராவி: உதுமான் (ரலி) - முஸ்லிம்)

**ஹதீது 2.** ''முஃமின்''. (விசுவாசி) கஃபாவைக் காட்டிலும் (அல்லாஹ்விடத்தில்) கண்ணியத்திற்குரியவனு யிருக்கிருன்''.

**ஹதீது 3.** ''முஃமின்'' அல்லாஹ் இடத்தில் அவனுடைய மலக்குகள் சிலரைவிட கண்ணியத்திற்குரிய வனுயிருக்கிருன்.

**ஹதீது 4** ''லாஇலாஹ இல்லல்லாஹ்'' என சாட்சி பகர்தல், சுவர்க்கத்தின் திறவுகோல்களாயிருக்கும்.

**ராவி**: முஆஜிப்னு ஜபல் (ரலி)

**ஹதீது 5** ''அணுவளவு ஈமானும் தனது நெஞ்சில் கொண்டவுன் நரகத்திலிருந்து வெளியேற்றப்படுவான்..'

**ராவி**: அபூசயிதுல் குத்ரீ- (ரலி)

**ஹதீது 6** ''வணக்கம் வழிபாட்டிற்குரிய நாயன் அல்லாஹ்வைத் தவிர வேறில்லை என்றும். முஹம்மத்(சல்) அவர்கள் அல்லாஹ்வின் திருத்தூதரென்றும்'' யார் சாட்சி பகர்கின்ருரோ, அவன் பேரில் 'அல்லாஹ்' நரகத்தை ஹராமாக்கி விடுகின்ருன் எனத் திருநபி (ஸல்) திருவருட் புரிந்ததை நான் செவியுற்றுள்ளேன்'' என ஹஜ்ரத் உபாதா இப்னு சாமித் (ரலி) அறிவித்துள்ளனர்,

## பிரிவு II. முஸ்லிமின் முப்பெரும் மூலாதாரங்கள்.

**ஹதீது 7.** ''நாங்கள் பெருமானுர் (ஸல்) அவர்கள் அருகே ஒருநாள் இருக்கும்போழுது மிக்க வெண்மையான உடை தரித்தவரும் மிகக் கருத்த உரோம முள்ளவருமான ஒரு மனிதர் பிரசன்னமானுர். பிரயாணத்தின் காரணமாக ஏற்படும் அறிகுறி ஒன்றும் அவர்பேரில் காணப்படவில்லை. (புழுதி. அழுக்குபடிந்ததிரேகம், அழுக்குத்துணி முதலியன) எங்களில் ஒருவரும் அவரை அறிந்தவருமில்லை. அவர் நபி பெருமானுர் (ஸ்ல்) அருகே உட்கார்ந்து தமது இரு

முழந்தாட்களை, அவர்களின் (நாயகம் ஸல்) முழந்தாட்களோடு சேர்த்து, தமது இரண்டு அகங்கைகளை அவர்களின் [பெருமானாரின் (ஸல்) ] இரண்டு துடைகள்மீது வைத்து," "முஹம்மதே! எனக்கு **இஸ்லாத்தைப் பற்றி**" விளக்கி வைப்பீர்களாக" என வேண்டினர்.

1 '**இஸ்லாம்**'' என்பது அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்கும், வழிபாட்டிற்கும், உரியநாயன்வேறில்லை எனவும், நிச்சயமாக முஹம்மது (ஸல்) அல்லாஹ்வின்திருத் தூதர் என்றும் நீர் சாட்சி பகர்வதும், தொழுகையை (நீர்) நிலைநாட்டி வைப்பதும் ஜகாத்தை (சன்மார்க்க வரியை) (நீர்) செலுத்துதலும், உமக்கு யாத்திரைக்குரிய இயல்பு இருக்குமாயின் அல்லாஹ்வின் (வீட்டிற்கு ஹஜ்ஜு செய்தலுமாகும் என்று (நபி பிரான்) பதிலுரைத்தனர். (அம் மனிதர்) தாங்கள் சொன்னது மெய் என்றார். பெருமானர் (ஸல்) இடம் (தாமே) கேள்வியும் கேட்டு, (தாமே) மெய்ப்பிப்பதைப் பற்றி நாம் ஆச்சரியமுற்றோம். "**ஈமானைப்** பற்றி எனக்கு அறிவிப்பீர்களாக" என்று, மீண்டும் அவர் வினவினர்.

2 "**ஈமான்**" என்பது, அல்லாஹ்வின் மீதும் அவனது மலக்குகள் மீதும், அவனுடைய வேதங்களின் மீதும், அவனுடைய திருத்தூதர் மீதும், இறுதித் தீர்ப்பு நாள் மீதும், நீர் விசுவாசம் கொள்வதும் நன்மையும் தீமையும் நிர்ணயப்படுத்தப்பட்டுள்ளன என்று நீர் விசுவாசம்கொள்வதுமாகுமென நபிகள் பிரான் (ஸல்) விடையளித்தனர். (மீண்டும்)அவர் 'தாங்கள் சொன்னது உண்மை' என்றார்.

"**இஹ்சான்**" (அழகுபடுத்துதல், சீராக்குதல், நன்மை செய்தல்.) பற்றி எனக்கு விளக்குவீர்களாக, என அவர் (மீண்டும்) வினவினர்.

3. "**இஹ்சான்**" என்பது, நீர் அல்லாஹ்வைக் கண்கூடாகக் காண்பதுபோல் வணக்கம் புரிவதாகும். நீர்

(அவ்வாறு) அவனைக் காணவிடினும், நிச்சயமாக அவன் உம்மைக் கண்டுகொண்டிருக்கிறான் (என்ற நிலையில் நீர் அவனை வணங்குவதாகும்) எனப் பெருமானார் (ஸல்) அவர்கள் பகர்ந்தனர்.

(ராவி) இந்த ஹதீது அறிவித்தவர் மேலும் கூறுகின்றார் :- நான் சிறிது நேரம் அங்கு தங்கியிருந்தேன். அல்லாஹ்வின் திருத்தூதர் என்னை நோக்கி 'உமரே! (இங்குவந்து) இக்கேள்விகளைக் கேட்டவர் யாரென்று உமக்குத் தெரியுமா? என்று கேட்டார்கள். அல்லாஹ்வும், அவனது திருத்தூதரும் நன்கறிந்தவர்கள்'' என்று நான் கூறினேன். நிச்சயமாக அவர் '**ஜிப்ரீல்**''(அலைஹி) ஆவர். உங்களுடைய மார்க்கத்தை உங்களுக்குக் கற்பிக்கும் பொருட்டு வந்தார்'' எனப் பெருமானார் பதிலுரைத்தனர்.

**ராவி**: ஹஜ்ரத் உமர் இப்னுகத்தாப் (ரலி)

கிரந்தம்: முஸ்லிம்.

**விளக்கம்**: சத்திய சன்மார்க்கத்தின் அடிப்படையான முப்பெரும் மூலாதாரங்கள் இந்த ஹதீதில் நமக்கு விளக்கப் பட்டுள்ளன. பெருமானார்(ஸல்)அவர்களின் உம்மத்திற்கு கிடைத்துள்ள மாபெரும் பாக்கியங்களில் இதுவு மொன்றாகும். முந்தின நபிமார்களின் உம்மத்துகளுக்குசன்மார்க்க அம்சங்களை சவிஸ்தாரமாகத் துலக்கவேண்டி சர்வலோக ரட்சகனாகிய அல்லாஹ் (ஜல்ல ஷானஹு வதஆலா) வானவரை அனுப்பியதாகத் தெரியவில்லை. அதுவும் மனித ரூபத்தில் வியப்புறும் தோற்றத்தில் வானவர்களின் தலைவர் ஹஜ்ரத் ஜிப்ரீல் (அலைஹி) பெருமானார் (ஸல்) அவர்களின் சன்னிதானத்தில் பிரசன்னமாகி வினா விடுத்து, விடையளிக்கப்பெற்று, விடைகளை மெய்ப்பித்து, உம்மத்திற்கு சன்மார்க்க போதனை புரிந்து சென்றுள்ளனர். என்னே! இவ்வும்மத்தின்பேரில் அல்லாஹவின் அனுக்ரகம், பேரருள்!

''லைச-பிலல்-லாமின்-லில்-அபீத்'' அல்லாஹ் அடியானுடன், அட்டூழியம், அநீதம் புரிபவனல்ல'' என்பதை சாற்றுகின்ருன். ஆயினும் அடியான் - விசுவாசகாதன் - துரோகியாகவே மிகுதமாகக் காணப்படுகின்ருன்.

''இன்னல்லாஹ - தூ -பஜ்லின்-அலன்-ஞசி- ''வலாகின்ன'' -அக்ரசன் -ஞசி - லா - யஷ்குரூன்'' நிச்சயமாக அல்லாஹ் கிருபாகடாட்சமுள்ளவனுக இருக்கிருன். ஆனல் மிகுதமான மானிடர்கள் (நன்றி கெட்ட) துரோகிகளாயுள்ளனர். அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவதில்லை.

ஆகவே, அடியானின்பேரில் உள்ள எஜமானுடைய அருட் கொடைகளையும், கடமைகளையும் அறிவுறுத்தி, எஜமானனின் சர்வ வல்லமைகளின் பேரில் உறுதி விசுவாசம் கொள்ளச்செய்வது **''ஈமானும்''**. எஜமானனின் திருப்திக்கும், பொருத்தத்திற்கும் தகுந்தவாறு வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் தனது கடமைகளை பகிரங்கமாக அடியானை நிறைவேற்றச் செய்வது **''இஸ்லாமும்''**, வாழ்க்கையின் பல்வேறுதுறைகளில் ஈடுபடுங்கால் தனதுசொல், செயல், சிந்தனையாகிய மனு ஜீவியத்தின் மூன்று நிலைகளிலும், திரிகரணசுத்தியாக அல்லாஹ்வின் உள்ளச்சப்பாட்டுடனும், அந்தரங்க, பகிரங்க பரிசுத்தத்துடனும், தூய்மையானமனப்பான்மையுடனும் ஒழுகுவது **இஹ்சானுமாகும்.**

ஆகவே, சத்திய சன்மார்க்கத்தின் (தீனுல் இஸ்லாம்) இம் முப்பெரும் மூலாதாரங்களும் எம்பிரான் (ஸல்) அவர்களின் உம்மத்திடையே, ஒருங்கே அமையாத வரையில் ''உம்மத்தி''சம்பூரண உம்மத்தியாகக்கருதப்படமாட்டான், ''ஈமான்'', அஸ்திபாரமாயுள்ளது. இதைக்கொண்டேதான் 'இஸ்லாம்''. ' ஈமானின்றி'',''இஸ்லாம்''இருக்கமுடியாது. ஆகவே ''ஈமான்'' கொண்டு ''இஸ்லாமிய''அனுஷ்டானங்களில் ''இஹ்சானுடன்'' ஒழுகி, பரிபூரணத்தைஅடைவதே மனு சிருஷ்டி லட்சியம் என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.

## அத்தியாயம் II
## பிரிவு III
## கலிமாவின் மஹத்துவம்.

ஈமானின் மூலாதாரம், மூலப் பிரமாணமாகிய புனிதத் திருமொழி "**லாஇலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரசூலுல்லாஹ்**" என்பதை சவிஸ்தாரமாக விளங்கிக் கொண்டோம். இத் திருமொழிதான் "**தவ்ஹீத்**" (ஏகத்துவம்) உடைய அஸ்திபாரமும் அடிப்படையுமாகும். "தவ்ஹீத்" என்பதின் பொருள் (வாஹிதாக்கி வைத்தல்,) ஒன்ருக்கி வைத்தலாகும். "அல்லாஹ்" வல்லாத அனைத்திலும், அதாவது, அல்லாஹ்வின் மஹோன்னத "**தாத்**" தைத் தவிர்த்து சிருஷ்டி வர்க்கங்கள் அனைத்திலும், அவனது "**குத்ரத்**"தென்னும் "இணைதுணையற்ற அபாரசக்தி"யும், "**அம்ர்**" என்னும் மஹத்துவ மிக்க ஆக்ஞையும், "**மஷிய்யத்**" தென்னும் திருச்சித்தமும், அடிப்படையும், அஸ்திபாரமுமாய் உளது. ஆகவே தோற்றங்கள், ரூபங்கள், உருவங்கள், வடிவங்கள், சுருங்கக்கூறுமிடத்து சிருஷ்டி வர்க்கங்கள் பல்வேருயினும், சர்வமும் அவனது சிருஷ்டி என்கிற ஹோதாவிலும், சர்வத்திலும் ஏற்படக்கூடிய தன்மைகள், பண்புகள் யாவும் அவனது ஆக்ஞைகளைக் கொண்டும், நாட்டத்தைக் கொண்டுமாய் இருக்கும் என்கிற அடிப்படையிலும், சர்வ சிருஷ்டிகளின் "அசல்" என்னும் மூலாதாரம், "அல்லாஹ்"வின் மகோன்னத "**தாத்தாய்**" இருக்கிறது. இதைத்தான் "**தவ்ஹீத்**" என கூறுகின்ருேம். சர்வ சிருஷ்டிகளும் அவனுல் படைக்கப்பட்டவை. அதில் காணப்படும் தன்மைகளும், பண்புகளும், தெளிவாகக் கூறுமிடத்து, சிருஷ்டி வர்க்கங்களினின்று அடையும் பிரயோஜனம், லாப நஷ்டம், சாதகம், பாதகம் இத்தகைய பண்புகள், தன்மைகள், ஜாடாவும் அவனது ஏவலைக் கொண்டாய்.இருக்கும்.

சிருஷ்டிப் பொருள்கள்யாவும் இரண்டு அம்சங்கள் கொண்டதாயுள. ஒன்று புறம். அதனது பகிரங்கமான ரூபம், வெளிப்படையான தோற்றம். அமைப்பு. மற்றொன்று அதன் அகம், அதனது அந்தரங்க லக்ஷியம், அதாவது அதில் அமைக்கப்பட்டிருக்கும் தன்மை, பண்பு, சக்தியுமாகும். இவ்விரண்டையும் **''ஸூரத்'' ''ஹகீகத்''** என சன்மார்க்க மரபில் கூறப்படும். ஸூரத் என்பது பகிரங்க தோற்றம். அமைப்பு. ஹகீகத் என்பது அதன் உள்குணம். அதன் மெய்ப் பொருளுமாகும். வெளித் தோற்றத்தை அமைத்தவனும் அவனே. அதன் அகப் பண்பை அடையச் செய்பவனும் அவனே. ஆகவே அனைத்தும் அல்லாஹ்வின் உடைமையாகும். புறமும் அவனுக்குரியது அகமும் அவனுக்குரியது. நாமும் அவனுக்குரியவர்கள். நம்மைச் சூழ்ந்துள்ள அனைத்தும் அவனுக்குரியவை. அண்டபகிரண்டம், இகபரம், விண்ணுலக மண்ணுலகம். இக்கண்களுக்குத் தோன்றுவதும், தோன்றுமலிருப்பதும், சர்வமும் அவனுக்குரியவை. அவைகளில் பொருத்தப்பட்டுள்ள, அமைக்கப்பட்டுள்ள தன்மைகளும், பண்புகளும் அவனுக்குரியவை. ஆகவே சர்வத்திலும் அவனைத்தவிர யாருமில்லை. பிறப்பிலும், வளர்ப்பிலும், சிறப்பிலும், இருப்பிலும், இறப்பிலும், வாழ்க்கையின் சர்வநிலைகளிலும், அவனுடைய திட்டம், ஏவலின்றி, வேறொன்றும் ஏற்படுவதற்குமில்லை, நடைபெறுவதற்குமில்லை.

சிருஷ்டிக்கப்பட்டவை சம்மந்தமாகவும், சிருஷ்டித்தவன் சம்மந்தமாகவும், இத்தகைய உறுதியும், விசுவாசமும், திடமான நம்பிக்கையும் பூண்டவனாக ஆய்விடுவதே **''ஈமான்''** எனக்கூறப்படும். மனு வர்க்கத்தின் சிருஷ்டி லக்ஷியமே இதுதான். இந்த லக்ஷியத்தை மனிதவர்க்கத்தினின்று எவன் ஏற்றுக் கொள்கின்றானோ அவன் **''முஃமின்''** (ஈமான் கொண்டவன்). என்ற திருநாமத்

த்தைக்கொண்டு அழைக்கப்படுகின்றான். ஈமானின் இவ் வாழ்ந்த தத்துவார்த்தத்தையும், மெய்ப் பொருளையும், மனிதன் பகிரங்கமாக பிரகடனப்படுத்தவேண்டி, இரண்டு அழகிய புனித சொற்களில் அமைக்கப்பட்டது. இது தான் **"கலிமா"** வென்னும் பரிசுத்த திருமொழியும், இஸ்லாமின் மூலப் பிரமாணமுமாகிய:

**"லாஇலாஹ இல்லல்லாஹ்**
**முஹம்மதுர் ரசூலுல்லாஹ்"** என்பதாகும்.

முந்திய பாகமாகிய "லாஇலாஹ இல்லல்லாஹ்" **ஈமானின்** மூலாதாரமாகும். சர்வ வல்லோனை சர்வ வல்லோனாக ஏற்றுக்கொண்ட பின், சர்வ வல்லோனின் சர்வ வல்லமைக்கு உட்பட்ட அடிமைகள், அசக்தர்கள் என்பதை உணர்ந்த பின், சர்வ வல்லோனின் ஆக்ஞைக் கிணங்க, திருச்சித்தம், திருப்பொருத்தத்திற் கிணங்க, கட்டுப்பட்டு வாழ்க்கையைக் கடாத்தவேண்டும். இத்தகைய இறைப் பொருத்தத்திற்குரிய வாழ்க்கை முறைதான், அனுஷ்டான அம்சம்தான், **"இஸ்லாம்"** எனக்கூறப்படும். இம் முறைகளை (ஈமானின் அனுஷ்டான ரூபங்களை) விளங்கிக்கொள் வதெப்படி? அனுஷ்டிக்க வேண்டிய முறைகள் யாவை? இம் முறைகளையும், அனுஷ்டான ரூபங்களையும், அடிமை செயலாற்றக்கூடிய ஒழுக்கங்களையும் சர்வ வல்லோனாகிய அல்லாஹ் ஜல்ல ஷானஹு வதஆலா, மனிதவர்க்கத்திற்கு **"நபி மார்கள்" "ரசூல் மார்கள்"** மூலம் வெளியாக்கி வைத்தான். இக்காரணத்தினால் தான் **"நபி"**யினுடைய வாழ்க்கை, ஜீவிய முறை (லாஇலாஹ இல்லல்லாஹ்வின் அனுஷ்டான ரூபம்) களை மனிதனுக்கு ஆதாரமாக நிர்ண யிக்கப்பட்டது. "நபி"மூலம் "லாஇலாஹ இல்லல்லாஹ்" மனுவர்க்கத்திற்கு அருளப்படுகின்றது. இந்த திட்டத்தை ஏற்றுக்கொண்ட மனிதன் ஈமான்கொண்டவனாக (முஃமின்) ஆய்விடுகின்றான். •அந்த "நபி"யின் வாழ்க்கை, ஜீவியம்,

"லாஇலாஹ இல்லல்லாஹ்"வின் செயல் ரூபகமாக திகழு கின்றது. அதை அடிப்படையாகக்கொண்டு "லாஇலாஹ இல்லல்லாஹ்" உடைய செயல் ரூபத்தை ஈமான்கொண்ட அம்மனிதன் (முஃமின்) தனவாழ்க்கையின் பல் வேறு துறைகளிலும் எடுத்து நடத்தாட்டி வைப்பதே **இஸ்லாமா கும்**. ஆகவே **"கலிமா"**வின் இரண்டாவது பகுதி **இஸ் லாமாகும்.** முதல் பகுதி **"ஈமானின்"** மூலாதாரமும், இரண்டாவது பகுதி **"இஸ்லாமின்"** மூலாதாரமுமாகும் "லாஇலாஹ இல்லல்லாஹ்" ஈமானும், "முஹம்மதுர் ரசூ லுல்லாஹ்" "இஸ்லாமும்" ஆகும். இவ்விரண்டும் சேகர மான "கலிமா", "தவ்ஹீதின்" அடிப்படையாகும்.

ஆகவே "தவ்ஹீத்" சர்வ சிருஷ்டிகளின் ஜீவாதார மும், சர்வ சிருஷ்டிகளின் நிர்வாக அடிப்டையுமா யிருக்கி றது. இக் காரணத்தினல் தான் சிருஷ்டிகளனைத்திலும், மாண்பும், மாட்சிமையும், அருளப்பட்டு, மஹோன்னதத் தத்துவார்த்தங்களைக் கொண்டவனுகவும், சிருஷ்டிகளனைத் திலும் அவனது பிரதிநிதியாகவும், சிருஷ்டிக்கப்பட்ட "மனு" விற்கு, இவனது இம்மைக்கும், மறுமைக்கும், இகபர மிரண்டிற்கும், சர்வ ஜீவ சிருஷ்டி நிர்வாகத்திற்கும் மூலாதாரமான, இம் மஹத்துவமிக்க "தவ்ஹீத்" உடைய திட்டம் சமர்ப்பிக்கப்பட்டது. யார் இதை ஏற்றுக்கொள் ளும் பாக்கியம் பெற்று "தவ்ஹீத்". "ஈமான்" உடையவர் களாகி, அதன்படி அனுஷ்டான பூர்வமான வாழ்க்கை (இஸ்லாம்)யை வாழ ஆரம்பித்தனரோ அவர்கள், புவியின் பேரில் அல்லாஹ்வின் பிரதிநிதிகளாகவே திகழ்ந்துள்ளனர். அல்லாஹ் ஒருவனுக்கு தன்னை அடிமையாக்கி, தான் கட் டுப்பட்டு, சிருஷ்டிகளனைத்தையும், தனக்கடிமையாக்கி, தனக்குக் கட்டுப்பட்டு, வசப்பட்டு வாழச் செய்தனர். அவரவர்களின் ஆத்மீகப் பக்குவத்திற்குத் தகுந்தவாறு, அண்டபகிரண்டம்அனைத்திலும் அதிகாரமுற்றுவிளங்கினர்.

அல்லாஹ்வின் அச்சப்பாட்டையும், வழிபாட்டையும், தமது வாழ்க்கையின் குறிக்கோளாக்கி, சிருஷ்டி வர்க்கங்கள் அனைத்தையும், தமக்கு அஞ்சி, வழிபடச்செய்தனர். சுருங்கக் கூறுமிடத்து **"மன் - கான - லில்லாஹி - கானல்லாஹு - லஹு"**, "எவன் அல்லாஹ்விற்குரியவனாகி விடுகின்றானோ, அல்லாஹ் அவனுக்குரியவனாகி விடுகின்றான்." என்னும் திருமொழியின் செயல்ரூபமாகத் திகழ்ந்தனர். அல்லாஹ் அவனுக்குரியவனாகி விடும்போழுது, அல்லாஹ்வின் அனைத்தும் அவனுக்குரியதாகி விடுகின்றன. ராஜன், அதிகாரி, முதலாளி, இவ்வுலக வாழ்க்கையில் நம்முடையவர்களாகி விட்டால், அவர்களைச் சார்ந்த அனைத்தும் நம்முடையதாகவோ, நமக்கு வசப்பட்டதாகவோ நமக்கு சலுகை செய்யக்கூடியதாகவோ ஆய்விடுகின்றன. ராஜாதிராஜனும், சர்வலோக இரட்சகனும், சர்வ சிருஷ்டி கர்த்நாவும், சர்வ வல்லோனுமாகிய "அல்லாஹ்"வை தனதாக்கிக்கொள்ளுங்கால், அவனது சர்வமும், நம்முடையதாகி விடுகின்றது. இதுவே "ஈமானின்" இணையற்றஇன்பமும், "இஸ்லாமின்" இம்மையின் லட்சியமும், மனு ஜீவிய மாண்பும், "லாஇலாஹ இல்லல்லாஹ்"வின் மஹத்துவமுமாகும்.

"அல்லாஹ் தனது அபார அருட் கோடைகளைக் கொண்டு நம்மனைவோரையும் இத்தகைய சம்பூரண **"ஈமானின்"** தரஜாத்துகளை அடையச் செய்வானாக." ஆமீன்.

---

# அத்தியாயம் III

## தப்லீகின் இரண்டாவது திட்டம் - தொழுகை.

### தொழுகையின் மஹத்துவம்.

தப்லீகின் ஆறு திட்டங்களில் இரண்டாவது திட்டம் தொழுகையா யிருக்கும். இஸ்லாத்தின் ஐந்து பர்லுகளி லும், இரண்டாவது பர்லு தொழுகைதான். கலிமா (ஏகத்துவத்திருமொழி) முதல் பர்லானதால், **கலிமாவின் மஹத்துவத்தைக் கல்பில் குடிகொள்ளச் செய்தலே** முதல் திட்டமாக அமைக்கப்பட்டுள்ளது. எப்பொழுது அடி யான், விசுவாசங்கொண்டு சர்வவல்லோனை ஏற்றுக்கொண் டானோ, அப்பொழுதே, உடனடியாக, அடிமைத்தனத்தின் அம்சங்களை வெளிப்படுத்தி வைக்கவேண்டும். இவ்வனுஷ் டான பூர்வமான வெளிப்படுத்துதலே **இஸ்லாமாகும்.** அவ்வனுஷ்டானங்கள் யாவற்றிலும், அடிமையை, அடிமை யாக நிரூபித்துக் காட்டக்கூடிய செயல் "தொழுகை" யாகும். "தொழுகையில்" முஃமின் தனது அங்கங்களைக் கொண்டு பஹிரங்கமாகப் புரியும் சர்வ செயல்களையும் அடக்கி ஒடுக்கி ஒழித்து, சர்வ அங்கங்களையும் அல்லாஹ் வின் வணக்கம் வழிபாட்டில் ஈடுபடுத்தி விடுகிறான். பஹி ரங்கமாக என்ன, அந்தரங்கத்திலும் "கல்பை" சர்வஊசாட் டங்களைவிட்டும், துர்ச்சிந்தனைகளை விட்டும், பாதுகாக்க அல்லாஹ்வின் உள்ளச்சப்பாடு, பய பக்தியைக் கொண்டு முயல்கிறான். துர்ச்சிந்தனைகள், துர்ச்செயல்கள், துன்மார்க் கங்கள் யாவும் "தொழுகையில்" அகற்றப்படுகின்றன. இப்பிரயாசையுடன், அகற்றுவதற்காக எடுக்கும் முயற்சி, நாளடைவில் இயற்கையாக மாறி, சுபாவமே துன்மார்க் கத்தை விட்டுச் சன்மார்க்கத்தளவில் திரும்பிவிடுகின்றது.

2. ஆகவே "தொழுகையில்" அல்லாஹ் மனிதனி னின்று துன்மார்க்க அம்சங்களை அகற்றும், அபூர்வ சக்தி யை அமைத்துள்ளான். இவ்விசேஷ சக்தி, திருமறையின் கீழ்க்கண்ட திருவசனவாயிலாக நமக்குஅறிவுறுத்தப்பட்டுள் ளது. **"இன்னஸ்ஸலாத்த-தன்ஹா-அனில்-பஹ்ஷாயி-வல்முன் கர்"** "நிச்சயமாகத் தொழுகை, மானக்கேடான வைகளையும் (துன்மார்க்கச்செயல்களையும்), விலக்கப்பட்ட கருமங்களையும் (மனிதனினின்று)" போக்கிவிடுகின்றது.

இனித் திரு நபி (ஸல்) அவர்களின் புனிதத் திரு மொழிகளை ஆராய்வோம்,

**ஹதீது 8** "ஒரு முஸ்லிம், அல்லாஹ்வின் திருட் பொருத்தத்தை நாடி, (சீர்திருத்தமாக) தொழுது வருவா ராகில், அவரது பாபங்களனைத்தும், இவ்விருட்சத்திலிருந்து இலைகள் உதிர்வதுபோல உதிர்ந்துவிடுகின்றன" எனப் பெருமானார் (ஸல்) அவர்கள் பகர்ந்துள்ளனர்.

**நூல்**-அஹ்மது **ராவி**: ஹஜரத் அபூதர்தா (ரலி)

**விளக்கம்**: ஹஜரத் அபூதர்தாவுடன், இலை உதிர் காலத்தில் பெருமானார் (ஸல்) அவர்கள் வெளிக்கிளம்பி, இலை உதிர்ந்துகொண்டிருக்கும் ஒரு விருட்சத்தை சுட்டிக் காட்டிய வண்ணம் ஹஜ்ரத் அபூதர்தா (ரலி) அவர்களை நோக்கி மேற்கண்ட ஹதீதை எடுத்துரைத்தனர்.

**ஹதீது**: 9 "ஐங்காலத்தொழுகையும் (இடைவிடாது) நிறைவேற்றுவது, ஒருவர் வீட்டருகே நீர்ப் பிரவாக மிகுந்து ஓடிக்கொண்டிருக்கும் ஆழமான ஆற்றில் ஐந்து நேரமும் ஸ்நானம் புரிந்துகொள்வதற் கொப்பாகும்" என ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர் கள் அறிவித்துள்ளனர்.

**நூல்:** முஸ்லிம் **ராவி:** ஹஜரத் ஜ.ஃபர் (ரலி)

**ஹதீது 10** ''உங்களி லோருவர் வீட்டு வாசலுக் கேதிரே நதி ஓடுகின்றது. அதில் அவர் பிரதிதினமும் ஐந்து வேளைக் குளித்தாரேயாளுல், அவரது சரீரத்தில் சற்றேனும் அழுக்கு எஞ்சியிருக்குமா'' எனப் பெருமானுர் (ஸல்) அவர்கள் சஹாபாக்களை நோக்கிவினவினர்? ''சிறித ளவும் அழுக்கு எஞ்சாது'' என நாம் பதிலுரைத்தோம் ''இவ்வாறே ஐங்காலத் தொழுகையின் நிலையுமாகும். அல் லாஹ் இதன் (இவ்வைங்காலத் தொழுகைகளிளுல்) கார ணத்தால் பாபங்களை (ஐங்கால ஸ்நானம் சரீரத்தின் அழுக் கனைத்தும் போக்கி விடுவதுபோல) போக்கிவிடுகிருன்.'' என நபிகள் நாதர் எடுத்துரைத்தனர்.

**ராவி:** ஹஜரத் அபூஹுரைரா (ரலி)

**நூல்:** புகாரி - முஸ்லிம் - (முத்தபக் அலைஹி.)

**ஹதீது: 11** ''நிச்சயமாக, கியாம நாளில், அடியான் அவனது (அமல்) நற்கிரியைகளினின்று ''தொழுகை'' சம்பந்தமாகத்தான் முதலில் கேட்கப்படுவான். அத் தொழுகை சீர்திருந்தி விடும்பட்சத்தில், அவன் வெற்றியும் ஜெயமும் பெற்றவளுவான். தொழுகை பங்கப்பட்டால், அவன் சீர்கெட்டு பெரும் நஷ்டமுற்றவளுவான்'' என நபி பெருமாளுர் (ஸல்) நவின்றுள்ளனர்.

**ராவி:** ஹஜ்ரத் அபூஹுரைரா (ரலி)

**நூல்:** திர்மதீ.

## பிரிவு 2

## தொழுகையைக் கைவிடுவதின் துன்பங்கள்.

**ஹதீது 12 அஸ்லாத்து - இமாதுத்தீன்** தொழுகை தீனின் (சன்மார்க்கத்தின்) தூணுயுளது. எவர் அதை நிலை

நாட்டினுரோ அவர் சன்மார்க்க (க்கட்டிட) த்தையே நிலை நாட்டினராவார். எவர் அதை கைவிட்டாரோ, அவர் சன்மார்க்க (க் கட்டிடத்) தையே இடித்துப் பாழாக்கின வராவர், எனத் திருநபி (ஸல்) அவர்கள் திருவுளமாயுளர்.

**குறிப்புரை:** கிட்டத்தட்ட எண்பது சதவிகிதம் இஸ்லாமிய சமுதாயத்தில் ஆண் பெண் மக்கள் தொழுகை யைப் புறக்கணித்தவராயுளர். அத்தகையோரை மேற் கண்ட ஹதீதின்படி எக்கூட்டத்தில் கணிப்பதேன்பதை அவர்களே தீர்மானித்துக் கொள்ளவேண்டும்.

**ஹதீது 13 மன்-தரகஸ்ஸலாத்த முத அம்மிதன் ப - கத்கபர** "அறிந்து தெரிந்து(வேண்டுமென்றே) தொழு கையை விடுபவன் காபிர் (ஆகிவிடுகிருன்) ("குப்ரு" டைய எல்லையை அணுகிவிடுகின்ருன் என ஹதீது கலாவல்லுனர் கள், இந்த ஹதீதுக்கு வியாக்கியானம் புரிந்துள்ளனர்.")

**ஹதீது 14** "உங்கள் பிள்ளைகள் ஏழுவயதடைந்து விடும் பட்சத்தில், அவர்களைத் தொழுகக் கட்டளையிடுவீர் களாக. மேலும் அவர்கள் பத்து வயதடைந்துவிட்டால், அவர்களை (அதனுல்) அடித்து (ரொம்பவும் கண்டித்து)த் தொழுக வைப்பீர்களாக, படுக்கையில் அவர்களைப் பிரித்து விடுவீர்களாக! (சேகரமாக ஒரே படுக்கையில் படுக்க விடாமல் தனித்தனி படுக்கையை விரித்துப் படுக்கச் செய் வீர்களாக.)

**ஹதீது 15 "லா - ஈமான - லிமன் - லா - சலாத்த லஹு - வலா - சலாத்த - லிமன் - லா - ஜகாத்தலஹு-"** "எவனிடம் தொழுகை யில்லையோ, அவனிடம (ஈமான் கொண்ட முஃமினுயிருப்பினும்) ஈமான் இல்லை, எவனிடம் (கடமைப்பட்டிருந்தும்) ஜகாத்து (சன்மார்க்க வரி) (கொடு பட) இல்லையோ, அவனுக்குத் தொழுகையும் இல்லை" எனப் பெருமானுர் பகர்ந்துள்ளனர்.

**ஹதீது: 16** "தொழுகையைக் கைவிடுவது மனிதனை குப்ரளவில் எத்தி வைத்துவிடும். மனிதனையும் குப்ரையும், சேர்த்து வைப்பது, தொழுகையை விட்டு விடுவதாகும். ஈமானுக்கும் குப்ருக்குமிடையிலுள்ள வித்தியாசம் தொழுகையைக் கைவிட்டுவிடுவதே" என எம்மிறை வள்ளல் (ஸல்) அவர்கள் எச்சரிக்கை செய்துள்ளனர்.

**நூல்:** முஸ்லிம் - திர்மதீ - அபூதாவுத்-
**ராவி:** ஹஜரத் ஜாபீர் (ரலி)

**குறிப்புரை:** இக்கருத்துள்ள பல ஹதீதுகள் பல்வேறு சஹாபாக்களைக்கொண்டு ரிவாயத்து செய்யப் பட்டுள்ளன.

**ஹதீது: 17** "ஒரு வேளைத் தொழுகை தவறிவிடுவது குடும்பம் சொத்து. சுகம் சர்வமும் பறிபடுவதற்குச் சமமாகும்" என நபிகள் பிரான் (ஸல்) நவின்றுள்ளனர்.

**ராவி:** நௌபில் இப்னுமுஆவியா (ரலி)
**நூல்:** இப்னுஹப்பான் - தர்கீப்.

**குறிப்புரை:** ஒரு வேளைத் தொழுகையைக் கைவிடுவதை, ஒரு முஃமின் தனது, இம்மையின் சர்வ உடைமைகளும், பறிபட்டுப்போனதாக பாவிக்குமளவு, கைசேதப் பட்டு எதிர்காலத்தில் பேணுதலா யிருக்க வேண்டுமென்பது கருத்து. இன்று முஃமின், வருஷக் கணக்காகத் தொழுகையைத் தவறச் செய்தாலும், அணுவளவும் அச்சப் படாத அளவு ஆத்மீகத் தத்துவம் இழந்து அந்தகாரத்தில் ஆழ்ந்து விட்டான்,

**ஹதீது 18:** "தொழுகையைப் பேணித் தொழுதவருக்கு, அத்தொழுகை, கியாமநாளில் பிரகாசமாகவும், கேள்வி கணக்குகளுக்கு ஆதாரமாகவும், ஈடேற்ற சாதனமாகவுமிருக்குமென்றும், எவர் பேணித்தொழுகவில்லையோ

அவருக்கு. அத்தொழுகை கியாம நாளில் பிரகாசமாகவோ ஆதாரமாகவோ, சாதனமாகவோ இருக்கமுடியாதென்றும், அப்பேர்ப்பட்டவர் கியாம நாளில் **பிர்ஔன், ஹாமான் உபையிப்னு கலப்** (போலோத்த கட்டாகடுங் காபிர்களுடன்) புடன் இருப்பர்'' என நபிகள் நாயகம் (ஸல்) நவின்றுள்ளனர்.

**ராவி:** அப்துல்லா ஹிப்னு அம்ரு (ரலி)

**நூல்:** (மிஷ்காத்து).

**குறிப்புரை** தொழுகையைப் பேணித் தொழுகாதவருக்கு இக்கதியானல், தொழுகையையே அறவே கைவிட்டோரின் கதி யாது? என்பதை உணர வேண்டும்.

## தொழுகையின் பலாபலன்கள்.

**ஹதீது 19** ''தொழுகையில் என் கண் குளிர்ச்சியுள்ளது.''

### தொழுகையினுல் பலா முசீபத்துக்கள் அகற்றப்படுகின்றன.

**ஹதீது 20** ''வானத்தினின்று இறங்கும் பீடை, துன்பங்கள், அல்லாஹ்வின் இல்லமேகி (மஸ்ஜிதுகளை) அவைகளை (நிரப்பமாக்கி) சிறப்பித்து வைப்போரின் பொருட்டால் அகன்று விடுகிறது.

### தொழுகையில் அல்லாஹ்வின் விசேஷ கவனம்.

**ஹதீது 21** ஒருவர் தொழுக ஆரம்பிக்குங்கால் அல்லாஹ் அவர்பால் விசேஷ கவனஞ் செலுத்துகிருன். தொழுது திரும்பியதும், அல்லாஹ்வும் தனது கவனத்தை திருப்பிக்கொள்கிருன்.

### பெருமானுரின் இறுதி உபதேசம்.

**ஹதீது 22 ''இத்த குல்லாஹ பிஸ்ஸலாத்தி''**- 'தொழுகை விஷயத்தில் அல்லாஹ்வை பயந்து கொள்ளுங்கள்' எனப் பெருமானுர் (ஸல்) மும்முறை பகர்ந்தனர்.

### தொழுகை ஸ்தல மாண்பு.

**ஹதீது 23** "பூமியின் எப்பாகத்தில். அல்லாஹ்வின் தொழுகை நிறைவேற்றப்படுகின்றதோ அப்பாகம் பூமியின் மற்ற பாகங்களிடம் பெருமை பாராட்டுகிறது".

**ஹதீது 24** சன்மார்க்க அம்சங்களில் தொழுகையின் பிரதானம், சரீரத்தில், சிரசின் பிரதானத்திற்கொத்ததாகும்.

அல்லாஹ்வினால் விதியாக்கப்பட்ட ஐங்காலத் தொழுகைகளின், ரக அத்துகளின் எண்ணிக்கை பதினேழாகும். 'தொழுகை' சம்பந்தமாக நூற்றுக்கணக்கான ஹதீதுகள் எழுதப்பட்டாலும், தொழுகையின் சிறப்பைப் பூர்த்தி செய்வதற்கில்லை. ஆகவே ப தி னே ழு ஹதீதுகளுடன் இப்பிரிவை, விரிவை அஞ்சி முடிக்கவேண்டியுளது.

## அத்தியாயம் IV

அடுத்தபடி, தப்லீகின் மூன்ருவது திட்டமாக இல்மு (சன்மார்க்க கலை) ஜிக்ரு (அல்லாஹ்வின் தியானம். சிந்தனை, நினைவு) இரண்டும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இத்தகைய மஹத்துவ மிக்கத் தொழுகையை நிறைவேற்றி வைப்பதற்குப் போதிய 'இல்மும், அல்லாஹ்வின் உள்ளச்சப்பாடும், பயபக்தி உண்டுபண்ணிக்கொள்ள "ஜிக்ரும்" இன்றியமையாதவை. ஆகவே இதை மூ ன் ரு வ து திட்டமாகக் கொண்டுள்ளோம்(

### தப்லீகின் மூன்ருவது திட்டம் இல்மு-ஜிக்ரு "ஜிக்ரு" "இல்மி"ன் சிறப்பு.

இல்மை (சன்மார்க்க கலையை) மக்களிடையே பரத்தும் அத்தியாவசியத்தைப் பற்றியும், மஹத்துவத்தைப் பற்றியும் நபிகள்பிரான் சத்தியத் திருமேனி (ஸல்) அவர்கள் நவின்றுள்ள நன்மொழிகளில் பிரதானமான சில திருமொழிகள் ஈண்டு வரையப்படுகின்றன. இவைகளினின்று தப்லீக்

(மக்கள் அளவில் சன்மார்க்கக் கலைகளையும் அம்சங்களை யும் பரத்துவது) எத்தகைய மஹோன்னத கைங்கரியம் என்பது விளங்குகின்றது.

**ஹதீது: 25** என்னில் நின்று ஒரு சிறு வசனம், வாசகமாயினும், அதை மக்களிடையே எத்தி வையுங்கள். கிரந்தம்: புகாரி -**ராவி**: அப்துல்லா ஹிப்னு அம்ரு (ரலி)

**ஹதீது: 26** அல்லாஹ் யாருடைய விஷயத்தில் நலவை நாடுகின்றுனோ அன்னுருக்கு சன்மார்க்க ஞானத் தை தந்தருள்புரிகின்றுன். நான் (நாயகம் ஸல்)பங்கீடுசெய் பவனுயும் அல்லாஹ் அருள் செய்பவனுயு மிருக்கின்றுன்.

கிரந்தம்: புகாரி - முஸ்லிம்

ராவி ஹஜரத் முஆவியா (ரலி)

**ஹதீது: 27** "நாம் சொல்வதைச் செவியுற்று, அதை மனனம் செய்து தனது நெஞ்சில் பொருத்திப் பாதுகாத்து (ஞாபகத்தில் வைத்து) பிறரளவில் எத்திவைத்த அடியானை "அல்லாஹ்" செழிப்புறச் செய்வானுக." - (இம்மைகளின் இன்னல்களைவிட்டும் ரக்ஷித்து அவனது அரும்பெரும் அருட்கொடைகளைத் தந்தருள் புரிவானுக என்பது கருத்து பெருமானுர் (ஸல்) அவர்களின் உபதேசங்களைக் கற்றறி ந்து மக்களுக்குக் கற்பிப்போர், எத்திவைப்போர் விஷயத் தில் பெருமானுரே (ஸல்) இவ்வளவு மஹத்துவமிக்க "துஆவை" மனங்குளிரச் செய்துள்ளபோது உம்மதினர் ஒவ்வோருவரும் இந்த துஆவை அடைவதற்கு ஆதார மான இத் "தப்லீகு" திருப்பணியில் ஈடுபட்டு அல்லாஹ் வின் பாதையில் வேளிப் புறப்பட்டாக வேண்டுமேன்பது இந்த ஹதீது மூலம் தேளிவாகின்றது.)

ராவி: அப்துல்லா ஹிப்னுமஸ்ஊத் (ரலி)

கிரந்தம்: திர்மதி - இப்னுமாஜா.

**ஹதீது: 28** "இதோ, இந்த சன்மார்க்கக் கலைகளைக் கற்றுக்கொள்வோரும்அறியாதவர்களுக்குக் கற்பிப்போரும் தான் சிறப்புற்றோங்கியவர்கள். நானும் (உலகில்) நலவின் போதனாகத்தான் அனுப்பப்பட்டேன்" என நபிகள்நாதர் (ஸல்) நவின்று, பின்னர் அவர்களிடையே தானும் உட்கார்ந்து கொண்டார்கள்.

**நூல்:** தாரிமீ-**ராவி:** அப்துல்லாஹ் பின் அம்ரு(ரலி)

**ஹதீது: 29** விதியாக்கப்பட்ட வணக்கங்களை மட்டும் நிறைவேற்றி, மீதநேரம் ஜாடாவும் மக்களிடையே வீற்றிருந்து நலவைப் போதித்துவரும் ஒரு "ஆலிம்" (மார்க்க அறிஞர்) பகல்தோறும் நோம்பு நோர்த்து இரவு தோறும் நின்று இறைவனை வணங்கும் "ஆபிதை" (தவசாலி) விட எவ்வளவு மஹத்துவமும் சிறப்பும் வாய்ந்தவரானால், உங்களில் சர்வ சாதாரணமான ஒருவர்பேரில் நான் (ஸல்) எவ்வளவு சிறப்புற்றவனோ அவ்வளவுசிறப்புற்றவராவார்."

**நூல்:** தாரிமீ-**ராவி:** ஹசன்ரலி (முர்சலான ஹதீது)

**ஹதீது 30** "நிச்சயமாக அல்லாஹ்வும் அவனது மலக்குகளும் (அமரர்களும்) வானம், பூமி, இவைகளில் காணப்படும் சர்வசிருஷ்டிகளும், தண்ணீரில் இருக்கக் கூடிய மச்சமும், பொந்திலிருக்கக்கூடிய சிற்றெறும்புங் கூட மக்களுக்கு நலவைப் போதிப்போருக்காக அல்லாஹ்விடம் (அவனது அருளும் அனுக்கிரஹமும் அவன்பேரில் நிரப்பமாக்கி வைக்க) பிரார்த்திக்கின்றன."

**ஹதீது 31** "ஒருவன் 'இல்மு' சம்பந்தமாக வினவப்பட்டு தெரிந்திருந்தும் (தேவையான பதிலளிக்காமல் தெரிந்த விஷயத்தை) மறைத்தானேயானால், கியாம நாளில் அக்கினி கடிவாளத்தைக்கொண்டு அவனது வாய் பூட்டப்படும்.

கிரந்தம்: அஹ்மத்; தீர்மதீ; அபூதாவூத்.

ராவி; அபூஹுரைரா (ரலி)

**ஹதீது 32** ''பகீஹ்'' (சன் மார்க்க நிபுணத்துவம் வாய்ந்தவர்) ஆவதற்கு அடையவேண்டிய (கற்கவேண்டிய) இல்மின் எல்லை என்ன? எனப் பெருமானுர் (ஸல்) அவர்களிடம் வினவப்பட்டது. எவனெருவன் சன்மார்க்க சம்பந்தமான நாற்பது ஹதீதுகளைக்(கற்று மனனம்செய்து) என் உம்மத்தளவில் எத்திவைத்தானே அவனை அல்லாஹ் ''பகீஹாக'' கியாமநாளில் எழுப்புவதுடன், நான் அவனுக்காக (அல்லாஹ்விடத்தில்) சாட்சி பகர்பவனும் பரிந்து பேசக்கூடியவனுமாக இருப்பேன்'' எனப் பெருமானுர் (ஸல்) பதிலுரைத்தனர்.

ராவி: ஹஜ்ரத் அபூதர்தா (ரலி)

**ஹதீது 33** ''ஒரு சன்மார்க்க அறிஞன் (பகீஸ்) ஆயிரம் தவம் புரிவோரைவிட (ஆபித்) ஷைத்தானுக்கு மிக்க கடுமையானவனுக இருக்கிறுன''

ராவி: இப்னு அப்பாஸ். கிரந்தம்: இப்னுமாஜா; திர்மதீ.

**கருத்து:** சன்மார்க்க அறிஞர் ஷைத்தானுடைய ஊசாட்டங்களையும், ஜாலங்களையும் நன்கு விளங்கிக் கொள்வர். மார்க்க ஞானமின்றி இரவு பகலாக இறை வணக்கத்திலும், தவத்திலும் ஈடுபட்டுள்ள ஆயிரம் தபசிகளாயிருப்பினும் ஷைத்தானுக்கு இலேசாக வசப்பட்டு வழி கெடுக்கப்படுவர்.

**ஹதீது 34** ''கோடையிலே ஒப்புயர்வற்ற கோடையாளி யார்என உங்களுக்குத்தெரியுமா?'' எனப்பெருமானுர் (ஸல்) வினவினர். ''அல்லாஹ்வும், அவனுடைய ரசூலும் நன்கறிந்தவர்கள்'' என சஹாபாக்கள் பதிலுரைத்தனர். அல்லாஹ் ஒப்புயர்வற்ற கோடையாளியாகவும். அடுத்த படியாக மனுவர்க்கத்திலேயே நானும், எனக்குப் பின் சன்மார்க்கக்கலைகளைக் கற்றுணர்ந்து, அவைகளை (மக்களிடையே)ப்போதித்துப் பரத்தினனே அவனுமாவான்.

**ராவி:** ஹஜரத் அனஸ்பின்மாலிக் (ரலி).

## "ஜிக்ரி"ன் சிறப்பு.

**ஹதீது 35** "தமது ரக்ஷகனை (அல்லாஹ்வை) தியானிப்பவரும். (ஜிக்ரு செய்பவரும்) தமது. ரக்ஷகனை தியானிக்காதவரும், உயிர் உள்ளவருக்கும். உயிர் இல்லாதவருக்கும், ஒப்பாவர்,"

**ஹதீது 36** "அல்லாஹ்வை தியானி(ஜிக்ரு)க்கப்படும் வீடும், அல்லாஹ்வை தியானிக்கப்படாத வீடும், ஜீவனுக்கும், பிரேதத்திற்கும் ஒப்பாகும்."

(முஸ்லிம்-அபூமூசா அஷ்அரீ. ரலி)

**ஹதீது 37** இஸ்லாத்தின் கடமைகள் என்பேரில் அதிகரித்து விட்டன. (ஆகவே) நான் (இடைவிடாது) பற்றிப்பிடித்துக்கொள்ளும் பொருட்டு ஒரு விஷயத்தை எனக்கு அறிவிப்பீர்களாக" என ஒரு மனிதன் பெருமானுர் அவர்களிடம் விண்ணப்பித்தான். 'உனது நாவு அல்லாஹ்வின் ஜிக்ரைக்கொண்டு ஊறிக்கொண்டி (வற்றிப்போகாமலி)ருக்கட்டும்" எனப் பெருமானுர் பகர்ந்தனர்,

(திர்மதி-அப்துல்லாஹ் இப்னுயுஸ்ர் ரலி)

**ஹதீது 38** "எனது அடியான் என்னை தியானிக்கும் பொழுதும், அவனது உதடுகள் என்னை(ஜிக்ரை)க்கொண்டு அசையும் பொழுதும். நான் (அல்லாஹ்) அவனுடனிருக்கிறேன்" என அல்லாஹ் அறிவிப்பதாகப் பேருமானுர் (ஸல்) பகர்ந்தனர் (மிஷ்காத்)

**ஹதீது 39** "கியாம நாளில், அல்லாஹ்விடத்தில். சிறப்பில் மிகுந்த அடியார்கள்யாரென நபிபெருமான் (ஸல்) அவர்களிடம் வினவப்பட்டது. மிகுதமாக அல்லாஹ்வை ஜிக்ரு (நாமஸ்மரணை) செய்பவர்கள் என நன்னபி (ஸல்) நவின்றனர்.

(அபூசயித் (ரலி) பைஹகீ)

**ஹதீது 40** "சுவர்க்கவாதிகளுக்குசுவர்க்கத்தில், அல்லாஹ்வின் ("ஜிக்ரு") தியானமின்றி (உலகவாழ்க்கையில்) கழிந்ததே அவ்விநாடிகளைப் பற்றிய கவலை, பச்சாதாபத்தைத் தவிர்த்து, வேறெந்த கவலையும் பச்சாதாபமுமிராது"

(ஹஜ்ரத் முஆஜிப்னுஜபல் (ரலி)-திப்ரானீ)

நித்திய ஜீவன் நித்திய சுபிக்ஷத்தை யடைந்த சுவர்க்கவாதிகளே, இம்மையில் அல்லாஹ்வின் தியானமின்றி போக்கின நேரத்தைப்பத்றி ஏக்கமுறுவதென்றால் "இம்மையை" அல்லாஹ்வின் தியானத்திற்கு அப்புறப்பட்ட விஷயங்களில் சம்பூர்ணமாகக் கழிக்கும், நம்மைப்போலொத்தவரின் கதி யாது? அல்லாஹ்வின் அனுக்கிரஹத்தையும், சத்தியத் திருநபியின் ஷபாஅத் (பரிந்து பேசுதல்) தையும் தவிர இதர மார்க்கமில்லை. சர்வ வல்லோன், இவ்வெளியோனையும், இதைவாசிப்போரையும், பிறரளவில் எத்திவைப்போரைய், முஸ்லிம்கள் அனைவோரையும், இவ்விசேஷ அருட் கோடைகளுக்கருகதை யுற்றவர்களாக்கியருள் புரிவானாக.

**ஆமீன், ஆமீன்-யாரப்பல் ஆலமீன், பிஹுர்மத்தி சய்யிதில் முர்சலீன். கதுபஹு அஹ்கருல் இபாத்.**

| | |
|---|---|
| தப்லிக் மர்கஜ்,<br>தர்பாரே கஞ்சே சவாயி,<br>நாகூர்.<br>15—9—'56. | **ஷெய்க்முஹம்மதுஅப்துல்கபூர்**<br>**(ரப்பானி காதிரீ)** |

---

**N. B:**: இதுவரை 43 ஹதீதுகள் தரப்பட்டுள்ளன. அடுத்த பாகத்திலும் இந்த எண்ணிலிருந்தே தொடர்வோம்.

**(முதற்பாகம் முற்றிற்று)**

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்

## இரண்டாம் பாகம்

## அத்தியாயம் V. பிரிவு I

## தப்லீக் நான்காவது திட்டம் 4 இக்ராமுல் முஸ்லீம் திட்ட விளக்கம்.

தப்லீகின் நான்காவது திட்டம் "**இக்ராமுல் முஸ்லிம்**" என்பதாகும் (முஸ்லிம் சகோதரனை கௌரவித்தல், கண்ணியப்படுத்தல், சங்கை செய்தல்) என்பது அதன் பொருள். மனுவர்க்கத்திடையே முஸ்லிமின் மகத்துவமென்ன? சர்வ சிருஷ்டி கர்த்தாவாகிய அல்லாஹ்ஜல்லஷான ஹுவதஆலா முஸ்லிம், மு:மினுக்கு, மாந்தரிடையே இப்பூவுலகில் எத்தகைய மகோன்னத மான்மியத்தை அருட்செய்துள்ளான். முஸ்லிமின் சிருஷ்டி லட்சியம் யாது? "**ஈமான்**" "**இஸ்லாத்தை**' ஏற்றுக்கொண்டதின் காரணமாக அடைந்துள்ள இம்மாபெரும் பாக்கியங்களையும், விசேஷத்துவங்களையும், இஸ்லாமிய சமுதாயம், உணர்ந்து பரஸ்பரப்பிணக்குகளையும், அபிப்பிராய பேதங்களையும், குரோத மனப்பான்மைகளையும், விட்டகன்று ஏகத்துவத்தை ஏற்ற ஏக சமுதாயமாக, முஸ்லிம் என்ற அடிப்படையில், ஒருவருக்கோருவர் தமது அருமை, பெருமையைத் தெரிந்து, அன்பு ஆதரவுடனும், நேச பாசத்துடனும், சகோதர வாஞ்சையுடனும், ஒருயிர் பல உடலாக இவ்வையகத்தே உயிர் வாழ்ந்து அல்லாஹ்வுக்கு பரிபூரணமாக வழிபட்ட அடியார்களாக இம்மையைக் கடாத்தி மறுமையை மகிமையுறச் செய்ய வேண்டுமென்பதே இத்திட்டத்தின் நோக்கம்.

### திட்ட லட்சியம்.

ஒருவருக்கோருவர் கண்ணியப்படுத்தினவராக எத்தகைய பாதகராயினும் மு:மின், முஸ்லிம், என்கிற அடிப்

படையில் அன்னாரை அணுகி கௌரவித்து, சங்கைசெய்து குற்றங்குறைகளை மனம் நோகா வண்ணம் எடுத்துரைத்து அல்லாஹ்வின்பேரில் ஆதரவுவைத்தவர்களாக சீர்திருத்த முயல்வதும், மறுமையை மறந்து மண்ணாசையில் மதி மயங்கி மாண்டுக்கிடக்கும் மாந்தரை மாண்புறச் செய்து, சிறிது சிறிதாக சர்வவல்லோனின் (அல்லாஹ்) சன்மார்க்க அம்ஸங்களை அவர்களிடையே நிலைநாட்டி வைப்பதும், சற்குணசீலர் சய்யிதினா முஹம்மதுர் ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் சுன்னத்துகளை (ஜீவியமுறை) (நடைமுறை) உம்மத்திடையே(அனுஷ்டான பூர்வமாக) உயிர்ப்பித்து வைப்பதும்தான் இத்திட்டத்தின் மூல லட்சியம்.

## இத்திட்டத்தின் விசேஷ மஹத்துவம்

நமது பேரில் அல்லாஹ்வின் அரும்பெரும் அருட்கொடையாக, அவனது அருள் அனுக்கிரஹமுற்ற அருமை அடியாராகிய **ஹஜ்ரத் மௌலானா முஹம்மத் இல்யாஸ்** அவர்களின் மூலம், இத்திட்டம் நமக்கு அருட்செய்யப்பட்டுள்ளது. இப்புவிதனில், இத்தகையவேற்றி, முஸ்லிம்களிடையே, இத் "தப்லீக்" திருப்பணிக்குக் கிடைத்த மூலகாரணம் இத்திட்டமேயாகும், "மனுஷத்துவத்தை" விட்டகன்று, மனுரூபத்தில் மிருகத்துவத்தைக் குறிக்கோளாகக்கொண்டு, உயிர்வாழும், மாந்தரிடையே இறைவழிபாட்டையும், சன்மார்க்க அம்சங்களையும் நிலைபெறச்செய்ய இத்திட்டத்தைவிட சிறந்தது வேறொன்றும் கிடையாது. முஸ்லிமல்லாத மாந்தரை. அணுகுங்கால் சிருஷ்டிகளனைத்திலும், மனுவின் மஹத்துவத்தை விளக்கச்செய்து, மனுவுக்கருளப்பட்டுள்ள விசேஷ பாக்யங்களையும் அருங்கொடைகளையும், அறிவுறுத்தி சர்வசிருஷ்டிகர்த்தா, சர்வவல்லோன், சர்வலோக ரட்சகன் முன்னில் சிரம்பணிதலும், இறைஞ்சுதலும், தகுமே தவிர சிருஷ்டிக்கப்பட்ட

வஸ்துக்களை, லட்சியமாகக் கொள்தலும், ஜீவிய சாதனங்களை, மூலாதாரமாகக்கருதுதலும், **காரணங்களில்** அமைக்கப்பட்டுள்ள **காரியங்களைக்**கண்ணுற்றோ, அனுபவித்தோ, **காரணகர்தாவை,** நிராகரித்தலும், இம்மாட்சிமை மிக்க மனு சிருஷ்டிக்கு அழகல்ல என்பதை உணர்த்தி இறைவழி பாடு. இறைவணக்கம் ஏகத்துவம், இவைகளின் பால் அழைப்பிட வேண்டும். முஸ்லிம் மக்களை அணுகுங்கால் மேற் கூறப்பட்ட மனுசிருஷ்டியின் மஹிமையைஉணர்த்துவதுடன் மனுவிடையே முஸ்லிமின் மாண்பையும்எடுத்துக் காட்டி முஸ்லிம் என்கிற ஹோதாவில், இவனுக்குக்கிடைத்துள்ள விசேஷ பாக்கியங்கள், இம்மையிலும் மறுமையிலும் யாவை என்பதை விளக்கி. **'ஆகிரத்தைக்'** கொண்டு நன் மாருயமும் எச்சரிக்கையும் செய்து, அல்லாஹ்வின் வழி பாட்டில் ஈடுபடுத்த முயலவேண்டும்.

இத்திட்டம் ஹஜரத் மௌலானா இல்யாஸ் (ரஹ்) அவர்கள் மூலம் அருளப்பட்ட அல்லாஹ்வின் அரும் பெரும் அருட்கொடையென கூறுமிடத்து, இத்திட்டம் ஹஜரத் மௌலானா அவர்களால், புகுத்தப்பட்ட நூதனத் திட்டமா? என ஒருசிலர் கருதக்கூடும். ஒரு சாரார் "தப்லீகின்" ஆறுதிட்டங்களையே "நூதனமெனக்கருதுப வராயுளர். உண்மையில் இது ஒன்றும் நூதன திட்டமல்ல. இஸ்லாமின் அடிப்படைத் திட்டம் **இன்னமல் முஃமினூன இக்வதுன் - பஸ்லிஹூ - பைன - அக வைக்கும்"** நிச்சயமாக விசுவாசிகள் சகோதரராயுளர். (நீங்கள்-சகோதரர்) ஒருவருக்கொருவரிடையே சீர் திருத்தி கொள்ளுங்கள் என்பது அல்லாஹ்வின் அஸ்திபாரத்திட்டம், இவ்வடிப்படையில் இஸ்லாமிய சமுதாயம். ஒருவருக்கொருவர், சகோதர வாஞ்சையில் அருள், அனுதாபத்துடன் உயிர் வாழ்வதேன்பதே இஸ்லாமிய லட்சியம்,

இத்திட்டம், இத்தகைய வாழ்க்கையை செயலாற்றும் சாதனமாயுளது. இதன் சம்பந்தமாக சற்குணசீலர் (ஸல்) அவர்களின் சில ஹதீதுகள் வரையப்படுகின்றன:-

''மனுவர்க்கம் அடங்கலும் **இஸ்லாமிய** இயற்கையின் பேரில் **சிருஷ்டிக்கப்படுகின்றது.**

**ஹதீது 44** ''இயற்கையின் பேரில் (இஸ்லாமிய அடிப்படையின் பேரில்) அன்றி ஒரு பிறப்பும் (குழந்தை யும்)பிறப்பதில்லை. பின்னர் பெற்ருேர் அதை(குழந்தையை) யூ த ஞ க வோ (யஹூதியாகவோ) கிருஸ்தவஞகவோ (நஸாருவாகவோ) அக் கி னி ஆராதனைக் காரஞகவோ, (மஜூஸியாகவோ) ஆக்கிவிடுகின்றனர்.

**ராவி:** ஹஜரத் அபூஹுரைரு (ரலி)

**நூல்:** புகாரி (முஸ்லிம்)

**முஸ்லிம்களின் பரஸ்பர கடமைகளும் ஒழுங்குகளும். பரிபூரண முஃமின்**

**ஹதீது 45** ''உங்களில் ஒருவரும் தன் நப்சுக்கு (தனக்காக) உகப்பதை தன் சகோதர முஸ்லிமுக்கும் (உகக் காதவரை விசுவாசங்கொண்டவருக (பரிபூரண முஃமிஞக) மாட்டார்'' என்று நபிகள் திலகம் (ஸல்) நவின்றுள்ளனர்.

**ராவி:** ஹஜரத் அனஸ் (ரலி)

**பரிபூரண முஸ்லிம்.**

**ஹதீது 46** ''எவருடைய நாவையும் கையையும் விட்டு (இதர முஸ்லிம்கள் ஈடேற்றம் பெற்றுள்ளனரோ. அவர் (தான்) முஸ்லிமா (கக்கருதப்படு)வர் எனப்பெருமா ஞர் (ஸல்) அவர்கள் பகர்ந்துள்ளனர்.

**ராவி :** ஹஜ்ரத்து அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி).

## சிறந்த இஸ்லாம்.

**ஹதீது 47** ''கைரான (சிறந்த-வரிசை பொருந்திய) இஸ்லாம் எது? எனப்பெருமானுர் (ஸல்) அவர்களிடம், ஒருவர் வினவினுர். ''நீர் பசித்தோருக்கு உணவளிப்பதும், நீர் அறிந்தவர்க்கும், நீர் அறியாதவருக்கும், நீர் ஸலாமைச் சொல்வது, (கைரான இஸ்லா)மாகும்,'' எனப்பெருமானுர் (ஸல்) விடை பகர்ந்தனர்.

## "உம்மத்தீ"யின் இலட்சணங்கள்.

**ஹதீது 48** ''முதியோரைக் கண்ணியப் படுத்தாதவனும், நம்முடைய இளேயோர்மீது ''இரக்கங்காட்டாதவனும் நம்முடைய உலமாக்களேக் கௌரவிக்காதவனும் நம்மைச் சேர்ந்தவனல்ல,'' (என் உம்மத்தீயல்ல) எனப்பெருமானுர் (ஸல்) அவர்கள் பகர்ந்துள்ளனர். (**நூல்** அஹ்மத்)

**ஹதீது 49** ''ஒரு மு:மினேத் துன்புறுத்தினவன் என்னேத் துன்புறுத்தினவனுவான்''. என்னேத் துன்புறுத்தினவன் அல்லாஹ்வைத் துன்புறுத்த நாடினவனுவான்''

(**நூல்**-திப்ருனீ).

**ஹதீது 50** ''முஸ்லிமை நிந்திப்பது: பாதகமாகும். அவனேக் கொலேசெய்துவிடுவது''குப்ராகும்'' (**நூல்**புகாரி)

**ஹதீது 51** அல்லாஹ்வினிடத்தில் ஒரு முஸ்லிமின் உயிர் (எத்தகைய) விலே மதிப்புள்ளதென்றுல், ஜகமனேத்தும், அதற்குப்பகரமாக அர்ப்பணமாயினும், அதற்குநிகராகாது'' எனஅண்ணல் இரசூல்(ஸல்)அருட்செய்துள்ளனர்.

**ஹதீது 52** ''தன்னுடைய சகோதர (முஸ்லிமை)னே விட்டு மூன்று நாட்களுக்குமேல் (விரோதித்து) அப்புறப்பட்டிருக்கலாகாது. (அவ்வாறு) மூன்று நாட்களுக்கு மேல் அப்புறப்பட்டிருந்து இறந்தவன் நரகத்தையடைவான்'' என நபிகள் நாதர் (ஸல்) நவின்றுள்ளனர்.

**நூல்** (அஹ்மத்)

**ஹதீது 53** ''மக்களை அவரவர்களின் அந்தஸ்துக்குத் தகுந்தவாறு நடாத்துங்கள்'' எனத் திருநபி (ஸல்) திருவுள மாயுளர்.

(**ராவி**: ஹஜ்ரத்ஆயிஷா (ரலி)-**நூல்**-அபூதாவுத்).

**ஹதீது 54** ''எவன் மக்களின்பேரில் இரக்கங்காட்ட வில்லையோ, அவன்பேரில் அல்லாஹ்வும், இரக்கங்காட்ட மாட்டான்.''

**ராவி**: (ஹஜ்ரத் ஜுரைரிப்னு அப்துல்லாஹ் (ரலி)

**நூல்**: (புகாரீ.)

**ஹதீது 55** ''மனுசிருஷ்டி (அனைத்தும்) அல்லாஹ் வின் குடும்பம். மனுவிடையே அல்லாஹ்வின் உகப்பிற் குரியவன்: அவனது (அல்லாஹ்வின்) குடும்பத்தினரனவில் நலவைச் செய்பவனுவான்'' எனச் சத்தியத் திருநபி (ஸல்) சாற்றி யுள்ளனர்.

**ராவி**: (ஹஜ்ரத் அனஸ் (ரலி)

**நூல்**: (பைஹகீ)

## இஸ்லாமிய சமுதாயம்

**ஹதீது 56** ''விசுவாசிகள்'' (முஃமினீன்) தங்கள் பரஸ்பர அன்பிலும், நேசத்திலும், இரக்கத்திலும், ஒரு சரீரத்திற்கொப்பானவராய் நீங்கள் காண்பீர்கள். (சரீரத் தின்) ஒரு அங்கம் நோவுறுங்கால், சரீரமுழுவதும், விழிப் பைக்கொண்டும், ஜுரத்தைக்கொண்டும் இன்னலுறு கின்றது.'' எனப்பெருமானுர் (ஸல்) அவர்கள் பகர்ந்துள் ளனர்.

**ராவி**: ஹஜ்ரத் நுஃமானிப்னு பஷீர் (ரலி)

**நூல்**: (புகாரீ) .

(**கருத்து**: ஒரு அங்கத்தின் காரணமாக சரீரமுழுவதும் வேதனையுறுவது போன்று, ஒரு முஸ்லிமின் கஷ்டதிசை யைக்கொண்டு சமுதாயமனைத்தும் சஞ்சலமுற்று ஆவன செய்ய வேண்டும்.)

**ஹதீது: 57** ''விசுவாசிகள்'' (முஃமினீன்) அனைவரும் ஒரு (தனித்த) மனிதருக்கொப்பாயுளர். அம்மனிதரின் கண் நோவுறுங்கால் சர்வமும் நோவுறுகின்றது. தலை நோவுறுங்கால் சர்வமும் (சரீர முழுதும்) நோவுறுகின்றது.

**ராவி:** ஹஜ்ரத் நுஃமானிப்னு பஷீர் (ரலி)

**நூல்:** (முஸ்லிம்)

(மேற்குறிப்பிட்ட கருத்தே இந்தஹதீதுக்கும்.)

## முற்கால முஸ்லிம்கள்.

''கண்ணியம் அல்லாஹ்விற்கும், அவனுடைய ரசூலுக்கும், முஃமின்களுக்கும் தான் உரியது'' என மெய் யான கண்ணியம் கௌரவம் முஃமினுக்குரியதாயுள்ளது என்பதை அல்லாஹ் (ஜல்) அறிவுறுத்துகிருன். ஒரு முஃ மினுடைய கண்ணியம் அல்லாஹ்வினிடத்தில் கஃபாவை விடமேலானது சில முஃமின்கள் அல்லாஹ்வினிடத்தில் சிலமலக்குகளை விட மேலானவர் என்ற ஹதீதுகளை (கண் ணியத்திற்குரியவர்) முதல்திட்டத்தில் விளக்கப்பட்டுள்ளது. இத்தகையமதிப்பும், மாண்பும், முஸ்லிமுக்குரித்தாயுள்ளது.

நம்முடைய முன்னோர் இவ்வையகத்தே மெய்யான முஃமின்களாகவும், சத்திய சீலராகவும் உயிர் வாழ்ந்து அல்லாஹ்வின் அரும் பெரும் அருட்கொடைகளுக்கு ஆளாகியிருந்தனர்.

**''வலாதஹினூ - வலாதஹ்ஜனூ - வஅன்துமுல்அஃலவ்ன- இன்குன்தும் முஃமினீன்''**

(நீங்கள் இழிவுறமாட்டீர்கள் - வியாகுலமடைய மாட்டீர்கள். நீங்களே உன்னத ஸ்திதியுள்ளவராயிருப்பீர்

கள் - நீங்கள் உண்மையான விசுவாசிகளாயிருப்பின் என்பது பதவுரை.)

இஸ்லாமிய சரித்திரம் சான்ருக இருக்கிறது. முஸ்லிம்கள் எத்தகை உச்சநிலை, உன்னத ஸ்திதியுற்றவராய் விளங்கினர். மாபெரும் வல்லரசுகளை முறியடித்து, சத்திய சன்மார்க்கத்தை புவியின் முக்கோணங்களிலும் பரத்தி அல்லாஹ்வின் திருமொழியை உயர்த்துவதிலேயே தமது ஆயுள் அனைத்தையும், அர்ப்பணித்து, சர்வ சமூகத்தினரிலும், தலைசிறந்து, நிகரற்று விளங்கினர். எக்காரணத்தினுல்? **"இன்குன்தும்-முஃமினீன்"** என "அல்லாஹ்" நிபந்தனையிட்டுக் கூறுகின்ருனே, அத்தகைய சம்பூரண ஈமானுடயவராய்த் திகழ்ந்ததினுல், அந்நிபந்தனையை மெய்ப்பித்து, அனுஷ்டான பூர்வமாக நிரூபித்துக் காட்டினதினுல் அம்மகோன்னத நிலையுற்றிருந்தனர்.

இன்று நாம் அதே சற்குண சீலரும், சாந்த சோரூபி, சத்தியத்திருமேனி சய்யிதினு முஹம்மதுர் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உம்மத்தினர், ஆனுல் பெயரளவில், பண்பில் அல்ல, செயலில் அல்ல.

**'லாயப்கா- மினல்-இஸ்லாமி-இல்லா-இஸ்முஹு'**
"இஸ்லாமினின்றும் பெயரைத்தவிர மற்ருென்றும் தரிபட்டிராதே" (பெயரளவில் தரிபட்டிருக்குமே) என அண்ணல் இரசூல் (ஸல்) அறிவித்தபடி, முஸ்லிமின் நாமம் பூண்டவராயுள்ளோம்.

ஆகவே நாம் அனைவரும் சகோதர வாஞ்சையில் ஒருவரை யொருவர் கெளரவித்தவராக பரஸ்பர அன்பு, அனுக்கிரஹ, அனுதாபத்துடன் அணுகி சீர்திருந்தி, குற்றங்குறைகளை நீக்கி சம்பூரண ஒழுக்கமுற்று இறைவழிபாட்டிலீடுபட இப்புனிதத்திட்டம் பெரும் சாதனமாக விளங்குகிறது. இதன் பலாபலன்கள் இத்திட்டத்தின் விசேஷச்சிறப்பை நிரூபித்துக் காட்டிவிட்டன.

## முஸ்லிம் சமுதாய சீர்திருத்த சாதனம்.

அல்லாஹ்வின் வழிபாட்டைவிட்டகன்று, முரண் பட்ட வாழ்க்கை வாழும் பாதகர்களைச் சீருறச் செய்ய சன்மார்க்க அபிமானமுடையோர், அல்லாஹ்வின் அச்சப் பாடுடையோர்', இதுவரையில் எடுத்துவந்த முயற்சி, அப் பாதக வாழ்க்கை வாழ்வோர், முஸ்லிம், முஃமின் என்ற ஹோதாவில் எத்தகைய கண்ணியத்திற்குரியவராவர் என் பதை மனதில் இறுத்தாட்டின நிலையில் அல்ல, பாதகச் செயல்களினுலும், முரண்பாட்டினுலும், அல்லாஹ்வின் எத்தகைய கோபசாபத்திற்கும், கடும்வேதனைக்கும் ஆளாகி உள்ளர், என்பது போன்ற **"வயீது"**களையும்: **"தற்ஹீ பாத்து"**களையும், அத்தகையோருக்கு எடுத்து எச்சரிக்கை செய்த வண்ணம், அச்சாரரை, நிராகரித்தவர்களாகவும், வேறுப்புக் கொண்டவர்களாகவும், அவர்களைவிட்டு அப் புறப்பட்டிருந்தார்களே தவிர முஃமினுடைய **"மர்த்தபா"** **"தர்ஜா"** (கண்ணியம், கௌரவம்) முதலியவற்றை முன் னிறுத்தி, அன்னுரை கண்ணியப்படுத்தி அழகியஉபதேசங் களுடன், அவர்கள் புறக்கணித்திருக்கும், சன்மார்க்க அம்சங்களின் சிறப்புகளை **(பளாயில்)** எடுத்துரைத்து, செயலாற்றுவதின் பேரில் அவர்களுக்கு ஆர்வமூட்டி **(தர்கீ பாத்து)** அல்லாஹ்வின் வழிபாட்டில் பெரும் பான் மையார் முயற்சித்தார்களில்லை, கோபம், ஆக்ரோஷம், கடுகடுப்பு, சிடுசிடுப்பு, நிராகரிப்பு, வேறுப்பு, அவமதிப்புப் போன்ற லட்சணங்கள் **இஸ்லாஹ்** (சீர்திருத்தல்) **தப்லீக்** (சன்மார்க்க அழைப்பு) முதலிய சேவைகளில் மிகைத் திருந்ததேதவிர, **"இக்ராமுல் முஸ்லிம்"** என்ற முஸ்லிமை முஸ்லிம் என்கிற ஹோதாவில், முஃமினை முஃமின் என்கிற ஹோதாவில் மரியாதை செய்து, சகோதர வாஞ்சையில் அன்பு அனுதாபம் காட்டி, அவரைச் சீர்திருத்தும், இறை வழிபாட்டில்ஈடுபடுத்தும், தன்மைகள்மிகைத்திருந்ததில்லை.

அடிப்படை யிருந்தும் அக்கரையற்றவராயிருந்தோம், அல்லாஹ் தனது அருள் அனுக்கிரஹத்தின் மூலம், இவ்வடிப்படையால் செயலாற்றும் முறையை "**இக்ராமுல் முஸ்லிம்**" என்ற (நான்காவது தப்லீக் திட்டம்) அம்சத்தில் ஹஜ்ரத் மௌலானா இல்யாஸ் அவர்கள் மூலம் நிலைநிறுத்தி வைத்தான்.

---

## அத்தியாயம் V

## பிரிவு 2

## தப்லீகின் மூலாதார திட்டம்.

"இக்ராமுல் முஸ்லிம்" என்ற இந்நான்காவது திட்டம், தப்லீகின் இதர ஐந்து திட்டங்களையும் நிறைவேற்றி வைப்பதற்குரிய சாதனமாகும். சத்திய சன்மார்க்கத்தின் சர்வ அம்சங்களையும், சகோதர முஸ்லிம்களிடையே உயிர்ப்பித்து வைக்கும் மூலாதாரமாக இத்திட்டம் அமைந்துள்ளது. சுருங்கக் கூறுமிடத்து தப்லீகின் ஜீவநாடியே இது தான். இந்த ஒரு திட்டத்தினுல் தப்லீகின் மற்ற திட்டங்களும் செயலாற்றப் படுகின்றன. முஃமினை, முஃமின் என்கிற ஹோதாவில், ஈமானின் காரணமாய் அவனுக்கு மனுவர்க்கத்தினிடையே அருளப்பட்டிருக்கும் மஹத்துவத்தையும், அல்லாஹ்வினிடத்திலும் அவனது ரசூலினிடத்திலும் கொண்டுள்ள ஈமானின் பலத்தினுல் அவனுக்கு ஏற்பட்டிருக்கும் விசேஷத்துவங்களையும் மனதில் பதித்து அவனை அணுகாது, அவனிடத்தில் கண்ணியத்துடன் அழகிய உபதேசங்களின் மூலம் இம்மையின் அழிவையும், மறுமையின் மாண்பையும் மனதில் இறுத்தாட்டி அல்லாஹ்வின் பால் அழைப்பது கொண்டு அவனில் சன்மார்க்க அம்சங்களை உயிர்ப்பிக்க முயர்ச்சிக்காத வரையில், நாம் அவனை அல்லாஹ்வின் வழிபாட்டில் ஈடுபடுத்த முடியாது. அவனது

சகல துன்மார்க்க நடைமுறைகளையும் புறக்கணித்து, மு:மின் என்கிற ஒரே லட்சியத்தில் தோன்றும் மாண்பை மனதில் கொண்டு, பரிசுத்தத்தெளிவான கல்போடு அவனை அணுகுங்கால் நமது கல்பின் தூய்மையும், கலப்பற்ற நிஷ்கலங்கமான புனித மனப்பான்மையும் அவனது கல்பிலும் பிரதி பலிப்பதைக் காணலாம்.

## கல்பு என்னும் கண்ணாடி.

கண்ணாடி சுத்தமாக இருந்தால் அழகிய தோற்றமுடையவன் அதே தோற்றத்தில் கண்ணாடியில் தன்னைக் காண்கின்றான். அழுக்கேறிய கண்ணாடியில் அழகிய ரூபமும் குரூபியாய் காட்சியளிக்கிறது. இம்மாதிரியாக மு:மின் ஒருவன் தெளிவான மாசற்ற மனப்பான்மையுடன் தனது சகோதர முஸ்லிமை நேர்வழியடையச் செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு, அல்லாஹ்வினிடத்தில் திடனான ஆதரவு வைத்தவனாக, அணுகுங்கால் அந்த மு:மினுடையகல்பில் அல்லாஹ், ஹிதாயத்(நேர்வழி-நீதிநெறி) தவ்பீக் (நன் நாட்டம்) உடைய ஊற்றுகளை உதிக்கச் செய்கின்றான். இது குறித்து எம்பிரான் (ஸல்) அவர்கள் "அல்-மு:மினு-மிர்ஆத்துன்-லில்மு:மின்." (மு:மின் தனது சகோதர மு:மினுக்கு கண்ணாடி போன்றவனாவான்) என இயம்பி உள்ளார்கள். மானிடரைப் பொதுவாகவும் சகோதர முஸ்லிம்களை விசேஷமாகவும், நேர்வழியிலும், தனது பாதையிலும் அழைப்பிடுங்கால், இந்த அடிப்படையையே கடைப்பிடித் தொழுகும்படி அல்லாஹ் (ஜல்) கட்டளையிட்டுள்ளான்.

"உத்உ-இலா-சபீலி-ரப்பிக்க-பில்-ஹிக்மத்தி-வல்-மௌஇலத்தில்-ஹஸனா."

["(முஹம்மதே!) நீர், அல்லாஹ்வின் பாதையில், சன்மார்க்கத் தளவில் பூர்வாயத்துடனும், அழகிய உபதேசங்களுடனும் (மக்களுக்கு) அழைப்பிடுவீராக!"]

## "கஷ்த்து" ஒரு புனித பணி.

நாம் நமது சகோதர முஸ்லிமை அணுகி அல்லாஹ் வின் பாதையில் அழைக்கும் வழக்கத்தைக் கொள்ளா விடில், அவரிடத்தில் கலிமாவின் மஹத்துவத்தை உணரச் செய்ய முடியாததோடு தொழுகையில் ஈடுபாடடையவும், சன்மார்க்கக் கலைகளைப் பரத்தவும், அல்லாஹ்வின் அச்சப்பாட்டை, அந்தரங்க பயபக்தியை, "தக்வாவை", "ஜிக்ரை", உண்டுபண்ணவும் பிரதிபிரயோஜனத்தை நாடாது சன்மார்க்கத்திற்காகவேண்டி சம்பூரணமாக, அல்லாஹ்வின் திருபொருத்தத்தை நாடி, தொண்டாற்றி வழிபடும் மனப்பான்மையாகிய "இக்லாஸை" ஏற்படுத்தவும், இவை யாவற்றையும், பொதுவாக மனுவர்க்கத்திலும், விசேஷமாக முஸ்லிம்களிடையேயும் பரத்திவைக்க நமது மற்ற அலுவல்களை விட்டொழித்து, அல்லாஹ்வுக்காக அவகாச மெடுத்து சன்மார்க்கப் பிரயாணங்கள் செய்வதில் ஈடுபடுத்தவும், இயலாது, ஆகவே சர்வத்திற்கும் அடிப்படையாக, நம்மை நாம் தாழ்த்தி, சகோதர முஸ்லிம்களிடையே "இக்ராமுல் முஸ்லிம்" என்கிற இந்த நான்காவது திட்டத்திற்கிணங்க செயலாற்றாத வரை, சன்மார்க்கத்தின் எந்த அம்சங்களையும் நிலைபெறச் செய்ய முடியாது. இதற்காக வேண்டியே இத்திட்டத்தை தப்லீகின் சகல திட்டங்களின் ஜீவ நாடியாகக் கருதவேண்டுமென ஆதியில் எடுத்துரைத்தோம். இதை செயலாற்றுவதற்குரிய சாதனமாகவே தப்லீகின் அனுஷ்டான அம்சமாகிய '**கஷ்த்து**" நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கஷ்த்து மூலம் நான்காவது திட்டத்தை நாம் நிறைவேற்றுகின்றோம். அகில உலக முஸ்லிம்களிடையே தப்லீகின் இம்மாபெரும் அங்கீகாரத்திற்கு இத்திட்டம் தான் மூலகாரணம் என்பதை நம் கல்பில் இருத்தி இதன் வாயிலாக நமது சிருஷ்டி லட்சியமாகிய தப்லீக் சேவையை வையகத்தே பரப்பும் புனித பணியில் முழுமனதுடன் மென்மேலும் முன்னேற முயர்ச்சியுடையவர்களாகத் திகழ வேண்டும்.

இம்மஹோன்னதப் பணியை அல்லாஹ்வினுடைய புறத்திலிருந்து அனுப்பப்பட்ட சர்வ நபிமார்களும், ரசூல் மார்களும் புரிந்துள்ளனர். எம்பிரான் (ஸல்) அவர்கள் மக்கமாநகர பதிமூன்றுவருஷகால நபித்துவ வாழ்க்கையை சம்பூரணமாக இதில் ஈடுபடுத்தி யுள்ளனர். ஒரு நபியும் தமது இருப்பிடத்தில் இருந்து கொண்டு பிரசாரம் செய்து விடவில்லை. தமக்கு ''நபித்துவம்'' அருளப்பட்டுள்ளது என, தமது சமூகத்தினரை, தமதிடத்தில் அழைக்கவில்லை, ஒவ்வொரு நபியும், ரசூலும், ''நபித்துவம்'' அருளப்பட்ட அடுத்த க்ஷணமே, அல்லாஹ்வின் ஆக்ஞையை சமூகத்தி னரில் எத்திவைக்க, சமூகத்திடையே, தாம் சென்றுள்ள னர். காடுகளிலும், வனாந்தரங்களிலும், கடலிலும், திடலி லும் நகரங்களிலும், நாடுகளிலும், கடற்கரை யோரங்களி லும் அலைந்து திரிந்துள்ளனர். ஹஜ்ரத் நூஹ் (அலை), ஹஜ்ரத்லூத் (அலை), ஹஜ்ரத் ஹூத் (அலை), ஹஜ்ரத் ஷுஐப் (அலை), ஹஜ்ரத் மூசா (அலை). ஹஜ்ரத்ஈசா(அலை), இறுதியாக எம்மிறை வள்ளல் சய்யிதினா முஹம்மதுர் ரசூ லுல்லாஹ் (ஸல்) போன்ற மஹத்துவமிக்க மூர்சலீன்களின் புனித ஜீவிய சரித்திரங்கள் அடங்கலிலும், இத்திட்ட அடிப் படையில், நல்லொழுக்கத்துடன், தமது சமூகத்தினரை அண்டி ஏதத்துவத்தூதை எத்திவைத்த வரலாறுகள் அபரி மிதமாகக் காணப்படுகின்றன. எம்பிரான் (ஸல்) அவர் களுக்குப் பின் இப்புனித கைங்கரியம் சஹாபாக்களால் நிறைவேற்றப் பட்டது. பின், தோன்றுதோட்டு, நாளது வரை, சேகரமாகவோ, தனிப்பட்ட ஹோதாவிலோ, உம் மத்தில் தோன்றிய குத்புகள், அவ்லியாக்கள், அஹ்லுல் லாக்களால், எம்பிரான் (ஸல்) அவர்களின் இப்பரிசுத்த அனந்தரமும், (விராசத்) மாண்புமிக்க பிரதிநிதித்துவமும், (நியாபத்) எடுத்து நடத்தப்பட்டுள்ளது.

இறுதியாக கியாம நெருக்கமான இக்கால், சஹாபாக்களின் காலத்தில் சேகரமாக நிறைவேற்றப்பட்டது போல், மீண்டும் சேகரமாக நடத்தக்கூடிய மாபெரும் பாக்கியத்தை அல்லாஹ் "தப்லீகின்" இத்திட்ட அடிப்படையில், அருகதையற்ற நம்மனோருக்கும் தந்தருட் புரிந்துள்ளான். சத்தியத் திருநபி இத்திருப்பணி சம்பந்தமாக சாற்றியுள்ள சில ஹதீதுகள் ஈண்டு வரையப் படுகின்றன :-

**ஹதீது 58 "லஅன்-யஹ்தியல்லாஹு-பிக்க-ரஜுலன்-கைருன்-லக்க-மினத்துன்யா-வமாபீஹா,"** 'உன்னைக்கொண்டு அல்லாஹ் ஒருமனிதனை நேர்வழியுறச் செய்வது, உலகம், உலகத்திலுள்ள சர்வ வஸ்துக்களைவிட, உனக்கு நலவானதாயிருக்கும்" என எம்பிரான் (ஸல்) அவர்கள் ஹஜ்ரத் அலி (ரலி) அவர்களை ஜிஹாதுக்கு அனுப்புங்கால், எடுத்துரைத்து, மக்களை, போர்புரிவதற்கு முன்பதாக, அல்லாஹ்வின் பால் முதலில் அழைப்பிடும்படி ஆக்ஞையிட்டனர்.

**ஹதீது 59** "இரண்டு அடியார்கள், ஒருவன் கீழ் கோடியிலும், மற்றொருவன் மேல் கோடியிலும் (இம்மையில்) வசித்தவண்ணம், அல்லாஹ்வுக்காக ஒருவருக்கொருவர், நேசிப்பவராயிருப்பின், கியாம நாளில், அவ்விருவரையும் அல்லாஹ் ஒருங்கே கூட்டி, இதோ! எனக்காக அவனை, நீ, நேசித்தவனாக (உலக வாழ்க்கையில்) இருந்தாய் என (சுட்டிக் காட்டி, பெருமை பாராட்டி)க் கூறுவான்",

**ராவி:** ஹஜ்ரத் அபூஹுரைரா (ரலி)

**நூல்:** ஷுஃபுல் ஈமான்.

**ஹதீது 60** "எவன் இன்னலுற்றோரை, இயல்புறச் செய்கின்றானோ, அல்லாஹ், அவனுக்கு எழுபத்து மூன்று

வகைப்பட்ட அருட்கொடைகள் அருள் செய்கின்றான். அவைகளில் ஒன்றின் காரணமாக அவனது காரியங்கள் யாவும் கைகூடிவிடும். ஏனைய எழுபத்திரண்டும் கியாம நாளில், அவனது அந்தஸ்துகள் (தரஜாத்து) உயர்வதற்கு உதவியாகும்.''

ஹதீது 61 ''எவனொருவன், தனது சகோதர (முஸ்லி மை)னைக் காணவேண்டி, வெளிப் புறப்படுகின்றானோ, அவனை எழுபதினாயிரம் வானவர், விடையளித்து அனுப்பு வதுடன், அவன் பேரில் யாவரும் சோபனம் கூறு கின்றனர்.''

(நான்காவது திட்டம் முற்றிற்று.)

---

## அத்தியாயம் VI

## தப்லீகின் ஐந்தாவது திட்டம்.

### " இக்லாஸுந்நிய்யத். "

''நிய்யத்துடைய இக்லாஸ்'' என்பது எண்ணத்தின் தூய்மையும், கலப்பற்ற பரிசுத்தத்தன்மையுமாகும். நிஷ் கலங்கமான மனப்பான்மையுடன், அல்லாஹ்வின் திருச் சித்தத்தையும், திருப் பொருத்தத்தையுமே லட்சியமாகக் கொண்டு இதர, எத்தகைய உலக ஆசா பாசங்களும், நோக்கங்களுமின்றி நல்லொழுக்கத்தோடு சன்மார்க்க நெறி முறைகளை அனுஷ்டிக்கும் தன்மையே ''இக்லாஸ்'' எனப் படும். சத்திய சன்மார்க்கத்தின் சகல கிரியைகளிலும், ஏவலை ஏற்பதிலும் விலக்கலை விட்டுவிடுவதிலும், அல் லாஹ்வின் பொருத்தத்தை நாடிய வண்ணம், அல்லாஹ் வுக்காக வேண்டியே, நிறைவேற்றும், உறுதியான எண்

ணம் இஸ்லாமிய ஆசாரங்கள் அனைத்திற்கும் அடிப்படைத் திட்டமாயுள்ளது. இதைத்தான் எம்மிறை வள்ளல் சய்யிதினு முஹம்மதுர் ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வசல்லம் அவர்கள் **ஹதீது 62 "இன்னமல்-இஃமாலு-பின்-நிய்யாத்தி-வ-இன்ன-லிகுல் லிம்ரியின்-மா-நவா"** என இயம்பியுள்ளார்கள். "நிச்சயமாக, அமல்கள் (நற்கிரியைகள்) எண்ணங்க(ளின் தூய்மையை)ளைப் பொருத்ததாகும்."

மனிதன் போற்றப்படுவற்கோ, படாடோபத்திற்கோ, புகழ்பெருவதற்கோ, பதவி உயர்வடைவதற்கோ, கௌரவ அந்தஸ்த்தை அதிகப்படுத்துவதற்கோ அல்லது பிற எண்ணங்களின் தூண்டுதலினுலோ "அமல்" செய்வானுயின் அத்தகைய அமல் இக்லாஸுடைய அமலாகவே கருதப் படமாட்டாது. எந்த நோக்கத்துடன், நாட்டத்துடன் அமல் நிறைவேற்றப் படுகிறதோ, அந்த நாட்டமோ, நோக்கமோ கிட்டிவிடக்கூடும். ஆனுல் அத்தகைய அமல் அல்லாஹ்வின் அருள் அனுக்கிரஹத்திற் கருகதையற்றதாகி, அல்லாஹ்வினுல் ஏற்றுக்கோள்ளப்படாமல், இம்மையிலும் இழிநிலை அடைவதுடன் மறுமையிலும் பல்வேறு தண்டனைக்குரியதாகி விடும்.

நாம் எத்தகைய நற்கருமம் புரிவதிலும், சன்மார்க்க அம்சங்களைக் கடைப்பிடித் தொழுகுவதிலும், அல்லாஹ்வின் ஏவலுக்கிணங்க நடந்து, அல்லாஹ்வை நம்முடன் பொருந்திக்கொள்ளச் செய்ய வேண்டுமென உறுதியான எண்ணங்கொள்ள வேண்டும். இம்மையின் எவ்வித பிரதி பலனும் நமது நோக்கமல்ல, மறுமையின் நிரந்தர நலமே நம் லட்சியம், அல்லாஹ்வின் திருச்சித்தமே நாம் கொள்ளும் குறிக்கோள் என ஒவ்வோரு அமலிலும் (செய்கையிலும்) எண்ணத்தைச் சீர் திருத்தித் தூய்மைப் படுத்திக்கொள்ள வேண்டும். அல்லாஹ்வுக்காக வேண்டியே "அமல்" செய்வதைத்தான் "இக்லாஸ்" எனக்கூறப்படும்.

## "இக்லாஸ்"

### வாழ்க்கையின் பல துறைகளில் அடைவதெப்படி?

மனிதன் அல்லாஹ்வுக்காக வேன்றே ஒரு அமல் செய்ய முற்படுகையில், ஷைத்தான் அவனைப் பல்வேறு வகைகளில் வழிகெடுத்து அவனது அமலைப் பாழாக்கிவிட முயல்கிறன். இம்மையின் சுகபோகங்களை இதயத்தில் புகுத்தி, லட்சியத்தின் தூய்மையைப் பங்கப்படுத்திக் கலப்புறுதலாக்குகின்றுன், இம்மனே நிலை ஏற்படாத வண்ணம். இக்லாஸை அடையவேண்டி, உலகில் கிட்டும் கௌரவம், பிரசித்தம், புகழ் பிறயாவும் நிறந்தர மற்றவை, அழிந்துப் போகக்கூடியவை என்பதை அடிக்கடி மனதில் இறுத்தாட்டி, மறுமையின் நிறந்தரத்தையும் அழியாத் தன்மையையும், அல்லாஹ்வின் சுபசோபனத்தைப் பெரும் சிறப்புமிக்க கண்ணிய நிலையையும் கல்புக்கு உணர்த்தி அல்லாஹ்வின் ஆக்ஞை அடிபணிவதையே லட்சியமாகக் கொள்ள வேண்டும். இக்லாஸை அடைந்த நல்லடியார்கள், தங்களது வாழ்க்கையின் பல துறையிலான சகல உலகக் காரியங்களையும் சம்பூர்ண சன்மார்க்க நிலைக்கு மாற்றி விடுகின்றனர். இத்தகையோர் தூங்குவது, விழிப்பது, புசிப்பது, பொருளீட்டுவது போன்ற வற்றிலும் எண்ணத்தைத் தூய்மைப்படுத்தி, இக்லாஸைக்கொண்டு நிறைவேற்றி, அல்லாஹ்வின் அனுக்கிரஹத்திற் கருகதையுள்ளவர்களாகி விடுகின்றனர். உதாரணமாக, நோன்பு நோர்ப்பதில் சவாபு கிடைக்கும், தேகாரோக்கியத்திற்கும் தூண்டுகோலாகும், அல்லது ஹஜ்ஜு செய்வதில் சவாப்பும் கிடைக்கும், சுற்றுப்பிரயாணமுமாகும், விரோதிகளை விட்டும் அப்புறப்பட்டு மிருக்கலாம், அல்லது தான தருமம் செய்வதில், (இரப்போருக்கு ஈதலில்) பலனும் கிட்டும், யாசகனின் பெருஞ் சத்தமும் அடங்கும், என (இருவித) எண்ணத்துடன் இவ்வகையான காரியங்களை கிரியாம்சைக்

குக் கொண்டுவருவதால் அவையாவும் ''இக்லாஸி''ன் வரம்புக்கு அப்பாற்பட்டு, அமல்கள் அனைத்தையும் வீணாக்கி விடும். நாம் செய்யும் கருமங்கள், நல்லெண்ண மற்றதாய், மனோ இச்சைகளைத் தீர்த்துக்கொள்ளவோ, மக்களிடையே மதிப்பைப் பெறவோ நிறைவேற்றப்படுமாயின், அவை யாவும் அல்லாஹ்வின் புறத்திலிருந்து அளிக்கப்படும் அபரிமிதமான அருட் கொடைகளை இழந்து, உயிரற்ற உடல்போலாகி விடுகின்றன. இக்காரணத்தினால்தான் எம்பிரான் ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்கள் கீழ்க்கண்டவாறு எச்சரிக்கை செய்துள்ளார்கள்.

**ஹதீது 63** ''கியாம நாளில், உலகம், (அல்லாஹ்வின் சந்நிதானத்தில்) முன் நிறுத்தப்படும். அதில் அல்லாஹ்வுக்காக வேண்டி, எது உள்ளதோ, அது அப்புறப்படுத்தி, ஏற்றுக்கொள்ளப்படும், மீதி (யாவும்) நரக நெருப்பில் எறிந்து விடப்படும். (தர்கீப்)

**ஹதீது 64** ''ஈமான்'' என்பது யாது? என சில சஹாபிகள் வினவினர் ஈமான் என்பது, ''இக்லாஸி''ன் திருநாமமாகும்'' என பெருமானார் (ஸல்) அவர்கள் பதிலுரைத்தார்கள். (தர்கீப்)

''இக்லாஸ்'' தான் ஈமான் என்பது கருத்து.

**ஹதீது 65** சன்மார்க்க அம்சங்களில் இக்லாஸைக் கடைப்பிடியுங்கள், அமல்கள் சற்றானாலும், போதுமானதாகும் (தர்கீப்) (அபரிமிதமாயினும், இக்லாஸற்ற நிலையில் பலனற்று போவதைவிட, இக்லாஸுடன் கூடிய சிறிதளவு பலனுற்று, போதுமானதாகின்றது.)

## ''ரியா''வின் கேடுகள்.

**ஹதீது 66** ''ஷிர்க்கு அஸ்கர்'' (சிறிய ஷிர்க்கு, சிறிய இணைவைத்தல்) பற்றித்தான் உங்கள் விஷயத்தில் நான்

அச்சமுறுகின்றேன்'' என (சஹாபாக்களை நோக்கி) அண்ணலிரசூல் (ஸல்) அவர்கள் அறிவித்தனர். **'ஷிர்க்கு அஸ்கர்'** (சிறிய ஷிர்க்கு) என்பது யாது? என சஹாபாக்கள் வினவினர். ''ரியா'' என்னும் பிறருக்குக் காட்டுவதற்காகச் செய்யப்படும், நற்செயல்களாகும்'' என பெருமானுர் (ஸல்) பதிலுரைத்தார்கள்.

**ஹதீது 67** ''எவன்பிறருக்குக் காட்டவேண்டி (புகழ் பிரசித்தத்திற்கு அல்லது தானும் தொழுகையுடையோன் எனக்காட்ட வேண்டி) தொழுகின்ருனே, அவன் ஷிர்க்கு (இணைவைத்தல்) செய்தான். எவன் பிறருக்குக் காட்ட வேண்டி நோன்பு நோர்த்தானே, அவன் ஷிர்க்கு செய்தான். எவன் பிறருக்குக் காட்டவேண்டி, தருமம் செய்தானே அவன் ஷிர்க்கு செய்தான்.'' என சத்தியத் திருநபி (ஸல்) அவர்கள் சாற்றியுள்ளனர்.

**ஹதீது 68** ''நரகத்தில் சோகத்தின் ஓடை ஒன்று உளது. அதை விட்டும் நரகமே. தினசரி நானூறு முறை அல்லாஹ்வினிடம் கார்மானம் தேடுகின்றது. அச்சோக ஓடையில். பிறருக்குக் காட்டவேண்டி (ரியா) (உலக வாழ்க்கையில்) வணக்கம், தவம் புரிந்தோர் புகுவர்'' என பிரிதோரு ஹதீதில் வந்துள்ளது.

**ஹதீது: 69** சத்தியத்திருமேனி (ஸல்) அவர்களை ஒரு சஹாபி அண்டி ''அல்லாஹ்வின் தூதரே ! ஒரு மனிதன் ஐசுவரியத்திற்காக வேண்டி ஜிஹாது (அல்லாஹ்வின் பாதையில் விரோதிகளுடன் போராடுதல்) செய்கிருன். மற்ருருவன் தான் மாபெரும் பராக்கிரமசாலி எனப் பிரசித்தம் பெற **ஜிஹாது** செய்கிருன். இவ்விருவரில் அல்லாஹ்வின் பாதையில் யாருளர் ? '' என வினவினுர். எவன் அல்லாஹ்வின் திருநாமம், அவனது சத்திய திருமொழி (கலிமா) யை உயர்த்தும் நோக்கத்துடன் ஜிஹாது

செய்கிருனே, அவன்தான் அல்லாஹ்வின் பாதையில் உள்ளவன். (ஜிஹாது செய்பவன்) என பெருமானுர் (ஸல்) பலுரைத்தார்கள்.

**ஹதீது 70** ''எவனெருவன் அல்லாஹ்வின் முகத்திற்காக (**திருப்பொருத்தத்தை அடைவதற்காக**) வேண்டியே ஒழிய துனியாவின் உடைமைகளுக்காக வேண்டி, சன்மார்க்கக் கலைகளைக்கற்ருனே, கியாம நாளில் ஜன்னத்துடைய சுகந்தத்தையும் அடையமாட்டான்''

**ராவி:** ஹஜ்ரத் அபூஹுரைரா (ரலி)

**நூல்:** அஹ்மத். அபூதாவூத், இப்னு (ரலி)

ஆகவே ''**இக்லாஸ்**'' அற்ற அமலும் (செயல்) அணுவளவும் பலனளிப்பதற்கில்லை. இல்மும் (கலை) இம்மியளவு இன்பம் பயப்பதற்கில்லை. அல்லாஹ் நம்மனைவோருக்கும் சர்வ சன்மார்க்க செய்கைகளிலும், ''இக்லாஸ்'' கொடுத்தருட்புரிவாஞக ! **ஆமீன்.**

(**ஐந்தாம் திட்டம் முற்றிற்று.**)

---

## அத்தியாயம் VII

### தப்லீகின் ஆருவது திட்டம் ''தப்ரீகே-வக்து.''

### திட்டவிளக்கம்.

தப்லீகின் ஆருவது திட்டம் **"தப்ரீகே வக்து"** என்னும் சன்மார்க்க சேவைக்காக வேண்டி அவகாசம் எடுத்து நேரம் ஒதுக்கி, அக்கால அளவை சன்மார்க்க சேவையில் ஈடுபடுத்துதலாகும். இதை **"குருஜ்-பீ-சபீலில்லாஹ்"** என்றும், **"நபர்-பீசபீலில்லாஹ்"** என்றும், **"ஜிஹாத்-பீ-சபீலில்லாஹ்"** என்றும் கூறப்படுகின்றது, அல்லாஹ்

வின் சன்மார்க்கப்பணியை சிரமேற்கொண்டு, அல்லாஹ்வின் பாதையில் புறப்படுவது. அல்லாஹ்வின் பாதையில் தனித்துவிடுவது. அல்லாஹ்வின் பாதையில் முயற்சிப்பது என்பது முறையே, இவைகளின் பொருளாகும்.

### திட்டத்தின் மஹத்துவம்.

விசேஷமாக தென்னாட்டு. முஸ்லிம் சகோதரர்களிடையே, தப்லீக் திருப்பணியில், முஸ்லிம்கள் அனைவர்களும், ஈடுபடுவதற்கு, இத்திட்டம் ஒருபெரும் தடங்கலாகக் கருதப்படுகின்றது. உண்மையில் எது தப்லீகையே, அகில உலக முஸ்லிம்களிடையே நிலைநாட்டி வைக்கும் மாபெரும் சாதனமோ, அதையே முட்டுக்கட்டையாகவும், தடங்கலாகவும் கருதுவது மாபெரும் துர்ப்பாக்கியமாகும். எச்செயலின் மூலமாக ஒரு லட்சத்து இருபத்து நான்காயிரம் நபிமார்கள் தமது சமூகத்திடையே அல்லாஹ்வின் சத்திய சன்மார்க்க அம்சங்களையும், ஏகத்துவத்தையும் சமர்ப்பித்தார்களோ, எதன் காரணமாக இறுதிநபி, சத்திய சற்குண சீலர் சையிதினா முஹம்மதுர் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இருபத்து மூன்று வருஷகாலம் இடைவிடா முயற்சியைக்கொண்டு, இறுதிநாள் வரை மனுவர்க்க மனைத்திற்கும் ஏகவல்லோனின் ஏகத்துவத் திட்டத்தை சம்பூரணமாக்கிக் கொடுத்தருட் புரிந்தார்களோ, எதன் விளைவாக, **"ஹஜ்ஜதுல்வதாஃ"** வென்னும் இறுதி ஹஜ்ஜின் இறுதி உபதேசத்தில் வீற்றிருந்துச் செவியுற்ற ஒரு லட்சத்து இருபத்து நான்காயிரம் சஹாபாக்கள், வையகத்தே, ஏகத்துவத்திருமொழியை உயர்த்தி வைத்தார்களோ, எதன் வாயிலாக அம்மஹான்களின் அடிச்சுவட்டை அணுவளவும் பிசகாது, பின்பற்றி ஒழுகிய **தாபியின்கள், தபஃதாபியின்கள்,** அல்லாஹ்வின் அனுக்கிரஹமுற்ற நல்லடியார்கள், மனுவர்க்கத்திடையே ஏகத்துவத்தூது விடுத்து, அதி அற்புதச் செயல்களைக்கொண்டு, உறுதி விசுவாசம் உண்

டாக்கி, சத்திய சன்மார்க்கத்தைக் குவலயத்தின் முக்கோ ணங்களிலும் பரத்தி, மூலையிலும் முடுக்குகளிலும் ''தவ்ஹீ துடைய'' குரல் (அஜான்-பாங்கு) எழுப்பச் செய்தனரோ, எத்தகைய மஹோன்னதத் திருப்பணியின் காரணமாக, இன்று ''உம்மத்தின்'' பெரும்பான்மையில் சர்வசன்மார்க்க அம்சங்களும், வாழ்க்கையின் பல்வேறு துறைகளிலும், உயிர்ப்பிக்கப்பட்டு செயலாற்றப்பட்டு வருகின்றனவோ, அத்தகைய புனிதக்கைங்கிரியத்தை, புவிதனில் பரத்தி, பாதகங்களை அகற்றி, அல்லாஹ்வின் அருட்கொடைகளை அடைவதற் கருகதையுற்றவராக ஆவதற்கின்றி, சாதகத் தையே பாதகமாக்கி கொள்வது, எத்தகைய மதியீனம்! எத்தகைய துர்ப்பாக்கியம்!

ஐந்தாவது அத்தியாயத்தின் இறுதியில், நான்காவது திட்ட விளக்கத்தில், சர்வ நபிமார்களும், இத்திருப்பணி யில் சமூகத்திடையே, தாமே ஊர் ஊராக, வீடுவீடாக, நாடுநாடகச் சென்றுள்ளனர் என்பதைக் குறிப்பிட்டுள் ளோம். மறுமையை மறந்து, இம்மையையே இன்றியமை யாத தெனவும், **ஆகிரத்தை** அறவே புறக்கணித்து, அக் கரையற்றவர்களாக உலக வாழ்க்கையே சதம், நிறந்தர மெனக்கொண்டு, மரணத்துடன் மனிதன், பொருட்பற்ற வனுகி அத்துடன் முடிவடைந்து விடுகின்ருன் என்ற அடிப் படையில், உயிர்வாழ்ந்துவரும் மக்களிடையே, அல்லாஹ் வின் அருட்கொடைகளை அறிவுறுத்தி, **ஆகிரத்தின்** இன்ப துன்பங்களை எடுத்துரைத்து, மறுமையின் நிரந்தர ஜீவி யத்தை இறுத்தாட்டி, சத்திய சன்மார்க்க அம்சங்களை நிலை நாட்டி வைக்கும் அரும் பெரும்பாக்கியத்தை, நமது இருப் பிடத்தை விட்டு அப்புறப்படாமல், அடைய முடியுமா? அவ்வாறு அடைவதாயிருப்பின், அகிலத்தில் அவதரித்த அல்லாஹ்வின் அடியார்கள் அனைவரும், நபிமார்களோ,

ரசூல்மார்களோ, சஹாபாக்களோ, இமாம்களோ, முஹத்தி தின்களோ, அவ்லியாக்களோ, ஆரிபீன்களோ, சூபிய்யாக் களோ, ஏன் உலகெங்கும் பிரயாணம் செய்துள்ளனர்?

## அல்லாஹ்வின் பாதையில் அவகாசமெடுத்துப் பணி ஆற்றுவதின் அத்யாவசியம்.

திருமக்காவைப் போலொத்த ஒரு ரகஅத்திற்கு ஒரு இலட்சம் ரகஅத்துடைய தவாபும், ஒவ்வோரு நற்கருமத் திற்கும் லட்சத்தளவில் பிரதிபலன் அருளப்படும் அப்புண் ணிய பூமியைவிட்டு சஹாபாக்கள் ஏன் அகன்றனர்? ஒரு ரகஅத்திற்கு ஐம்பதினுயிரம் ரகஅத்து தவாபு கிடைக்கும், திருமதீனுவை விட்டு, ஏன் பிரிந்தனர்? சத்தியத்திருமேனி, சற்குண சீலர் சையினு முஹம்மத் (ஸல்) அவர்களின் சஹவாசத்தைவிட, சிறப்புற்றோங்கிய சந்தர்ப்பமும், பாக் கியமும், வேறெதுவு மிருக்கமுடியுமா? அத்தகைய அரும் பெரும் பாக்கியத்தையும் விட்டகன்றதின் காரணம் தான் என்ன? ஹஜ்ரத் அப்துல்லாஹ் இப்னுரவ்வாஹா (ரலி) அவர்களை நோக்கி ''உங்களுக்கு முன்னதாக அல்லாஹ் வின் பாதையில் புறப்பட்டு உடனடியாகச் சென்றவர் ஐநூறு வருஷ பாக்கியத்தில் முற்பட்டு விட்டனர் எனப் பெருமானுர் (ஸல்) எடுத்தோதிய மர்மம் தான் யாது? ஹஜ்ரத் கஃப் (ரலி) அவர்களுடன் சத்தியத் திருநபி (ஸல் சம்பாஷணையையும், சலாமையும், நிறுத்தினதுமன்றி, சமுதாய பகிஷ்காரம் அனுமதிக்கப்பட்டதின் அகமியம்தா னென்ன? ஒரு லட்சத்து இருபத்தி நான்காயிரம் சஹாபாக் கள் உயிர்வாழ்ந்தபுவியின் இப்புனிதப் பகுதியில் (ஹிஜாஸ் பகுதியில் முபல்லிகின்கள் கணித்துள்ளபடி) பத்தாயிரம் சஹாபாக்களின் கல்லறைகள்மட்டும் இப்போழுது காணப் படுவதின் காரணம் தான் என்ன? ஏனைய சஹாபாக்கள் மனு இதயங்களை இறைவனின் ஏகத்துவத்தின் பால் அழைப்பிட்டவராக, ஏகத்துவத் திருமோழியை ஏற்றிவைக்

கும் மஹோன்னதத் திருப்பணியில் ஈடுபட்டவராக, புவி யின் பல்வேறு பகுதிகளில் பதிந்துவிட்டனர் என்பது புல ஞக வில்லையா? பதிமூன்று வருஷகால திருமக்காவின் நபித்துவ வாழ்க்கையில், மக்கமா நகரின் வீதிகளிலும், வீடுகளிலும், சந்தைகளிலும், கடைகளிலும், கூட்டங்களி லும் கூடியிருந்த மாந்தரிடையே, மாநிலத் தூதர் (ஸல்) மஹத்தான சஹாபாக்களான ஹஜ்ரத் அபூபக்கர் (ரலி), ஹஜ்ரத் உஸ்மான் (ரலி) ஹஜ்ரத் ஹம்ஜா (ரலி) ஹஜ்ரத் அப்பாஸ் (ரலி), ஹஜ்ரத் தல்ஹா (ரலி), ஹஜ்ரத் ஜுபைர் (ரலி), ஹஜ்ரத் உமர் (ரலி) முதலியவர்களுடன், சென்று சன்மார்க்க அழைப்பை சமர்ப்பிக்க வில்லையா! ஏகத்து வத்தூது இட வில்லையா? **"யா அய்யுஹன்னுஸ்! கூனூ-லாஇலாஹ-இல்லல்லாஹ்-துப்லிஹூ-"** (ஓ மக்களே! லாஇலாஹ இல்லல்லாஹ் எனக்கூறி உறுதி விசுவாசங் கொள்ளுங்கள் ஜயம் பெறுவீர்கள்" என அறைகூவி அழைப்பிட்டதை சன்மாக்க கிரந்தங்கள், சரித்திரப்பேரேடு கள் சாற்றவில்லையா?

ஹஜ்ரத் அபூ அய்யூப் அன்சாரீ (ரலி) அவர்கள் தொண்ணூறு வயது முதிர்ந்த தள்ளாடிய பருவத்திலும் ஜிஹாதுக்காக முற்பட்ட பொழுது, திடகாத்திரமும், பராக் கிரமும் நிறைபெற்ற, அன்னாரின் வாலிபப் புதல்வர்கள் முன்வந்து நாம் ஜிஹாதுக்குச் சென்று அல்லாஹ்வின் பாதையில் போராடத் தயாராயிருக்கிறோம். தாங்கள் எத் துணையோ ஜிஹாதில் பங்கெடுத்துக் கடமையை நிறை வேற்றியுள்ளீர்கள். இவ்வயோதிக நிலையில் வெளியேற வேண்டாம்" என விண்ணப்பித்தினர். "நீங்கள் ஜிஹா துக்குச் செல்வது உங்கள் பொருப்பை நிறைவேற்றுவதா யிருக்கும். அதன் பலனை, அல்லாஹ்வின் அருட்கொடை யை, நான் அடைய முடியாதேன, பதிலுரைத்து, தான் ஆயுத்தமாகி, ஜிஹாதில் பங்கெடுத்து இறுதியில் "குஸ் துன்துன்யா" (துருக்கியின் தலைநகரம் - கான்ஸ்டான்

டினோபிள் என ஆங்கிலத்தில் கூறுவர்) வில் ஷஹீதாகி விட்டனர். அன்னாரின் "கப்ருஷரீப்" இன்றைக்கும் கோடிக்கணக்கான உம்மத்தீகளின் ஜியாரத்திற்குரிய புனிதஸ்தலாமாக விளங்குகிறது.

## "ஜிஹாது விளக்கம்"

ஒரு சிலர் சன்மார்க்க சேவைக்காகவும், தீனைப்பரத்துவதற்காகவும் அல்லாஹ்வின் பாதையில் ஈடுபடுவதினை, புறப்படுவதின் சிறப்புகளையும், மஹத்துவங்களையும், அல்லாஹ்வின் ஆக்ஞைகளைக் கொண்டும், உத்தமநபி (ஸல்) அவர்களின் உபதேசங்களைக்கொண்டும், ஆதாரபூர்வமாக எடுத்துரைத்து ஆர்வமூட்டுங்கால், இவையாவும் வாளேந்தி விரோதிகளுடனும் குப்பார்களுடனும் போராடும் ஜிஹாதுகள் சம்பந்தப்பட்ட தாகுமென, சந்தேகமுறுகின்றனர், "ஜிஹாது" என்பது வாளேந்தி விரோதிகளுடன் போராடுவதை மட்டும் குறிக்கும் சொல்லல்ல. "ஜிஹாதின்" அகராதிப்பொருளே முயற்சித்தல், பிரயாசை செய்தல் என்பதாகும், இப்பொருளைக்கொண்ட எத்துணையோபதங்கள், "ஹதீது", "தலீல்"களில், ஆழ்ந்த ஆராய்ச்சியுடன் கவனிக்குமிடத்து, நமக்கு காணக்கிடக்கின்றன. அல்லாஹ்வின்பாதையில் முயற்சிப்பதற்கும், தெண்டிப்பதற்கும், பிரயாசைப்படுவதற்கும் "ஜாஹத" என்னும் பதம், அரபி பாஷையில் சர்வசாதாரணமாகப் பிரயோகிக்கப்படும். சாதாரண முயற்சி, பிரயாசைக்கும் "ஜஹ்த்" எனக்கூறப்படும், ஆகவே ஹதீதுகளில் வந்துள்ள சிறப்புகளையும், தவாபுகளையும், வாளேந்திப் போராடுவதை மட்டும் குறிக்கும் "ஜிஹாதுகள்" எனக்கொள்ளலாகாது, ஆகவே இத்தகைய புனிதத்துவங்களும், மஹத்துவங்களும், நிறைபெற்ற இப்பணியாற்றவே. இவ்வுலக ஜோலிகளை விட்டு, ஒரு குறிப்பிட்ட கால அளவு, இவ்வுலக ஜோலிகளை விட்டகன்று, அப்புறப்பட்டு அல்லாஹ்வின் பாதையில்சேவை புரிந்து அவனது அருள் அனுக்கிரஹமுறும் நோக்கத்து

டன், நேரத்தையும், அவகாசத்தையும் ஒதுக்குதலே ''தப்ரீகே - வக்த்'' என்னும் ஆறுவது திட்டமாகும்,

நிரந்தரமற்ற, அழிந்து நாசமுறும், இவ்வுலக ஜோலி களை விட்டகன்று, வாழ்க்கையின் பெரும் பகுதியை இக பர ஈடேற்றமுறவும், நிரந்தரமான மறுமையின் ஜீவியத்தை செப்பனிடவும், அல்லாஹ்வின் திருப் பொருத்தத்தை நாடியவண்ணம், அல்லாஹ்வின் பாதையில் கழிக்க வேண்டும். அல்லாஹ்வின் ஆக்ஞைகளை மக்கள் அள வில் எத்திவைக்க வேண்டும், உண்மையில் இது நபிமார் கள் செய்த சேவையாகும். இறுதி நபியும், நபிகள் நாத ருமான எம்மிறை வள்ளல் (ஸல்) அவர்களின் உம்மத் திற்கு, வையகத்தில் கியாம நாள் பரியந்தம் ஒப்படைக்கப் பட்ட பொருப்பும், மாபெரும் அநந்தரமுமாகும். அனு போக பூர்வமாகப் பார்க்குமிடத்து, ஒருவன் குடும்ப ஆசா பாசங்களுடன் பிணைக்கப்பட்டவனாக, உலகஜோலிகளில் ஈடுபட்டவனாக, சொந்த இடத்தில் இல்லத்தில் தரிபட்டவ னாக, இப்புனிதத் திருப்பணியின் பொருப்புகளை பூரண மாக நிறைவேற்ற முடியாது. தானும் போதிய பலனுற முடியாது. பிறரையும் பலன் பெறச் செய்ய இயலாது. இக்காரணத்தினாலேயே, இல்லத்தையும், இருப்பிடத்தை யும், இம்மையின் இணைப்புகளையும், இயல்புக்குத் தக்க வாறு, விட்டகன்று, இறைப்பணியில் ஈடுபட இத்திட்டம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதன் பலனால் தான் இதர ஐந்து திட்டங்களையும், நம்மினும், பிறரிலும் விளைவிக்க சாத்திய மாகும். சத்தியத் த்ருநபி (ஸல்), சன்மார்க்க சேவையில், சாற்றோணா இன்னல் இடுக்கண்களை அனுப வித்திருக்க, அவைகளில் ஓரளவாவது, ''உம்மத்தீ'' என் கிற ஹோதாவில் நாம் அனுபவிக்க முற்படவேண்டும், இல்லையேல் இத்திபா:் (அடிச்சுவடை பின்பற்றுதல்) உடைய பொருப்பை நிறைவேற்றினவர்களாக ஆவதற்கில்லை.

ஹஜ்ரத் ஆதம் (அலை) அவர்கள் முதல் எம்பிரான் முஹம்மத் (ஸல்) அவர்கள் வரை, சகல நபிமார்களும், அல்லாஹ்வின் ஆக்ஞைகளை மனுவர்க்கத்திடையே எத்தி வைக்கும். அல்லாஹ்வின் அடிமைகளை அல்லாஹ்வுடன், அணைத்து இணைக்கும் இம்மஹோன்னதக் கைங்கிரியத்தைப் புவிதனில் புரிந்து வந்துள்ளனர். எம்பிரான் (ஸல்) அவர்கள், இறுதி நபியாகவும், கியாமநாள் பரியந்தம் அல்லாஹ்வினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட, சத்திய சன்மார்க்கமருளப் பட்டவர்களாகவும், வையகமடங்களுக்கும், மனுவர்க்கமனைத்திற்கும், ஜின்னு வர்க்கத்திற்கும் (அக்கினி-சிருஷ்டிகள்-பைசாச வர்க்கங்கள்) அல்லாஹ்வின் திருத்தூதராகவும், சர்வ ஜீவராசிகளுக்கும், அல்லாஹ்வின் அருட் பிம்பமாக அருளப்பட்ட காரணத்தினால், இனி கியாம நாள் வரை, மனு வர்க்கத்திடையே ஒரு நபியோ, இரசூலோ ஏற்படப்போவதில்லை. நபித்துவம், எம்பிரான் (ஸல்) அவர்களைக் கொண்டு முடிவுற்றது. முத்திரை இடப்பட்டது. ஆகவே கியாம நாள் பரியந்தம் புவிதனில் நபிமார்கள் மனுவர்க்கத் திடையே புரிந்த இப்புனித சேவையை, உம்மத்தினராகிய நாம் செய்து வரவேண்டும் இப்பணியாற்றும் பொருட்டு அல்லாஹ்வின் ஆக்ஞைகளும், திரு நபி (ஸல்) அவர்களின் திரு மொழிகளும் பலஉள. அவைகளில் சில, அத்தியாவசியத்தை அறிவுறுத்த வேண்டி ஈண்டு வரையப்படுகின்றன :

## பிரிவு II

**I உம்மத்தின் சிருஷ்டி லட்சியமே மக்களிடையே தப்லீக் செய்வதாகும்.** 'குன்தும்-கைர-உம்மத்தின்-உக்ரிஜத்-லின்னாசி-தஃமுரூன-பில்-மஃரூபி-வ-தன்ஹவ்ன-அனில்-முன்கர்'' (குர்ஆன்)

''நீங்கள்-(சகல உம்மத்தினரை விட)-மைரான சிறப்புற்றோங்கிய உம்மத்தினராயுள்ளீர்கள் - உங்களை (இந்த

உம்மத்தை) மனுவர்க்கத்திற்காக வேண்டி வெளியாக்கப் பட்டது, (சிருஷ்டிக்கப்பட்டது,) நீங்கள் (அல்லாஹ்வின் ஏவல்களை எடுத்தோதிப் பரத்துவதும், விலக்கல்களை தவிர்க்கச் செய்வது) நலவை ஏவுவதும், தீயதைத் தடுப் பதுமாயுள்ளீர்கள்.

**விளக்கம்:** திருமறையின் திரு வசனத்திலிருந்து, அல்லாஹ்வின் புறத்திலிருந்து இந்த உம்மத்திற்கு அருளப் பட்டுள்ள இவ்விசேஷ பாக்கியம், மனுவர்க்கத்திடையே இறை வழிபாட்டை ஏவல், விலக்கல்மூலம், உண்டு பண் ணுவதின் காரணத்தினுல்தான் என்பது தெளிவாகின்றது.

**II தப்லீக் திருப்பணியாற்ற உம்மத்தில் நிரந்த ரக்குழு என்றென்றும் இருந்தாக வேண்டும்.** "வல்த குன்-மின்கும்-உம்மதுன்-யத்ஊன-இலல்கைரி-வ-யஃமு ரூன-பில் - மஃரூபி-வ-யன்ஹவ்ன - அனில் - முன்கர்-வ-உலாயிக்க ஹுமுல்-முப்லிஹூன்."(குர் ஆன்)

உங்களில் ஒரு (நிரந்தர) கூட்டம், நலவின் பால் அழைப்பிடுபவராகவும், ஏவல்களை நிலை நிறுத்துபவராக வும், விலக்கல்களைத் தடுத்துத் தவிர்க்கச் செய்பவராகவும், இருந்தாக வேண்டும். அத்தகையோரே, ஜயம் பெற்றவ ராவர்."

அல்லாஹ்வினுல் என்றென்றும் இருந்து பணியாற்ற வேண்டுமென்று பரலாக்கப்பட்ட, இக்கூட்டம், இக்குழு, இக்கோஷ்டி இன்று முஸ்லிம்களிடையே காணப்படு கின்றதா? பரலாக்கப்படாத இதர சமூகத்தினரிடையே இத்த கையக்கூட்டங்கள் காணப்படுகின்றன, அக்கூட்டங்கள் பல்வேறு பகுதிகளில் நிரந்தரமாக பிரசாரப் பிரயாணங் கள் செய்து வருகின்றன. உலகத்தில் இத்தொண்டாற் றவே, தோற்றுவிக்கப்பட்ட இஸ்லாமிய சமுதாயம், இத் தொண்டாற்றுவது என்ன? இதன் பெரும் பான்மை இத்

தொண்டில் ஈடுபட்ட ஒரு சிலரையும் செய்யவிடாது, துஷ் பிரசாரங்களையும், விரோத குரோத மனப்பான்மைகளையும் வளர்த்து, சமுதாய பிளவுகளை. சகோதரத்துவ சமத்துவ பிணக்குகளை உண்டுபண்ணுவதில் தொண்டாற்றி வரு கின்றது. அந்தோ! அல்லாஹ்வின் அரும்பெரும் அருட் கொடைகள் அடையப்பெற்ற, அவனிதனில் அல்லாஹ்வின் அதிகாரிகளாக அவதரிக்கப் பேற்ற உம்மத்தினரின் நிலை!

அல்லாஹ்வின் ஆக்ஞைகளை குர்ஆன் மூலம் அறிந் தோம். இப்போழுது சத்தியத் திருநபி சாற்றுவதை ஆராய்வோம்.

## தப்லீகின் அத்தியாவசியம்-அதைக் கைவிடுவதினால் விளையும் கேடுகள்

**ஹதீது 71** என் உயிர் யாருடைய கையில் இருக்கின் றதோ, அவன் (அல்லாஹ்) பேரில் சத்தியமாக! (கூறுகின் றேன்) நீங்கள், நிச்சயமாக நலவை ஏவி நிலைநாட்டுபவரா யிருப்பீர்களாக! தீமையை விலக்கித் தடுப்பவராயிரிப்பீர் களாக! அன்றேல் அல்லாஹ்வின் கடுமையான வேதனை உங்களைப் பிடிக்கும். அப்போழுது (அத்தகைய நிலை எற் பட்டுவிடின்) நீங்கள் அல்லாஹ்வை (அறைகூவி) அழைப் பீர்கள் (துஆ செய்வீர்கள்). உங்களுக்கு. பிரதி யுத்தரம் அளிக்கப் (துஆ ஏற்றுக்கோள்ளப்) படமாட்டாது.

**ராவி:** ஹஜ்ரத் ஹுஜைபா (ரலி) **நூல்** திர்மதீ. (துஆ ஏற்றுக்கோள்வதற்கும், நாட்டங்கள், கோரிக்கை கள். நிறைவேற்றப் படுவதற்கும், இப்பணியில் ஈடுபடு வது அத்தியாவசியம்.)

**ஹதீது 72** "ஒரு சமூகத்தைச் சேர்ந்த நபர் ஒருவன், தீமையிலும் பாதகங்களிலும் ஈடுபட, இதர சமூகத்தினர் அவனை (அப்பாதகத்தினின்றும்) த்தடுத்துவிட, சக்தியுற்றி ருந்தும், அத்தீயதைத் தடுக்கவில்லை யானால், அச்செய லின் காரணமாக, அச்சமூகத்தினரை, அவர்கள் மரணிப்ப

தற்கு முன்பதாகவே கோடூரமான தண்டனையிலாழ்த்தி விடுவான்.''

**ராவி:** ஹஜ்ரத் ஜுூரைரிப்னு அப்துல்லாஹ். **நூல்:** அபூதாவூத்-இப்னுமாஜா (சமூகத்தைச் சேர்ந்த தனித்த நபரும் வழிகெட்டு விட்டால், அவனை வழிபாட்டிலீடுபடுத்தி விடுவது சமூகத்தினரின் பேரில் கடமையாகும். இல்லையேல் சமூகத்தினர் தண்டிக்கப்படுவர் என்பது தெளிவாகிறது.) **இப்புனிதத் தோண்டை கல்பை (மனதை)க் கோண்டும் புரியாதவனில், கடுகின் விதையளவு ஈமானும் இருப்பதற்கில்லை.**

**ஹதீது 73** ''அவர்களை (திருத்தூதரின் அடிச்சுவற்றைப் பின்பற்றுேழுகும் நல்லடியார்களை)ப் பின்தோடர்ந்து ஒரு கூட்டம் தோன்றும் அவர்கள் எதைச்சோல்வார்களோ அதைச்சேய்ய மாட்டார்கள். எதைச் சேய்வார்களோ, அது ஏவப்படாததாக, கடமைப் படுத்தப்படாததாக யிருக்கும், யார் (என் உம்மத்தினின்று) அத்தகையோருடன், நாவைக்கோண்டு (நல்லுபதேசம் புரிந்து) போராடுகின்ருனே, அவனே முஃமினுவான், யார் அத்தகையோருடன் கையைக்கோண்டு (சக்தி-அதிகாரம்-சேல்வாக்கு-) போராடுகின்ருனே. அவனே முஃமினுவான். யார் அத்தகையோருடன் மனதைக்கோண்டு (வேருத்தவருக, அப்புறப்பட்டு விடுகின்ருனே) போராடுகின்ருனே, அவனே முஃமினுவான். இவைகளுக்கப்பால் கடுகின் விதையளவு ஈமானும் கிடையாது'' **ராவி:** ஹஜ்ரத் இப்னுமஸ்ஊத் (ரலி) **கிரந்தம்:** முஸ்லிம்.

## பிரிவு III

## இப்புனிதத் தோண்டில் ஈடுபட்டிருப்பதின் சிறப்புகள்.

(1) காலையிலோ, மாலையிலோ ஈடுபட்டிருப்பதின் பலன்.

**ஹதீது 74** ''அல்லாஹ்வின் பாதையில் காலையிலோ, மாலையிலோ, ஈடுபட்டிருத்தல், நிச்சயமாக, உலகம், உலகத்திலுள்ள சர்வ வஸ்த்துக்களை விட சிறப்பானதாகும்,''

**ராவி:** ஹஜ்ரத் அனஸ் (ரலி) **நூல்:** புகாரீ-முஸ்லிம்
(2) இரவும் பகலும் (ஒருநாள்) ஈடுபட்டிருப்பதின் பலன்.

**ஹதீது 75** "அல்லாஹ்வின் பாதையில் (போர்க்களத்தில்-விரோதிகளின் திடீர் தாக்குதல் ஏற்படாவண்ணம்) ஒரு பகலும், ஒரு இரவும் கண்காணித்துப் பாதுகாத்திருத்தல், ஒருமாத பகற்கால நோம்பைவிடவும், ஒரு மாத இராக்கால இடைவிடா வணக்கத்தை விடவும் சிறப்பானதாக யிருக்கும், எனப் பெருமானார் (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளியதை நான் செவியுற்றேன்." என ஹஜ்ரத் சல்மான் பார்ஸீ (ரலி) அறிவுத்துள்ளனர்.

**கிரந்தம்:** முஸ்லிம்.

**ஹதீது 76** "இருவகைப்பட்ட கண்கள் உள. அவைகளை ஜஹன்னத்துடைய நெருப்பு தீண்டாது. அல்லாஹ்வின் அச்சப்பாட்டினால் கண்ணீர் வடித்த கண்ணும், அல்லாஹ்வின் பாதையில் கண் விழித்திருந்து பாதுகாத்தக் கண்ணுமாகும்."

**ராவி:** ஹஜ்ரத் இப்னுஅப்பாஸ் (ரலி) **நூல்:** திர்மஜீ.

**ஹதீது 77** "அல்லாஹ்வின் பாதையில் புறப்பட்ட அடியானின் பேரில் உள்ள புழுதியும், நரக நெருப்பும், ஒன்று சேராது" எனத் திருநபி திருவாய் மலர்ந்துள்ளனர்.

**ராவி:** ஹஜ்ரத் அபூஹுரைரா (ரலி) **நூல்:** திர்மஜீ.

**ஹதீது 78** "அல்லாஹ்வின் பாதையில் புறப்பட்ட அடியானின் புழுதிபட்ட இரண்டு பாதங்களையும் ஜஹன்னத்துடைய நெருப்புத் தீண்டாது"

**ராவி:** அபூஅப்ஸ் அப்துர்ரஹ்மானிப்னு ஜுபைர் (ரலி) **நூல்:** புகாரீ.

ஹதீது 79 ''அல்லாஹ்வுக்கு, இரண்டு சொட்டுகள், இரண்டு தழும்புகளைவிட உகப்பான வஸ்து வேருென்றும் கிடையாது. அல்லாஹ்வின் அச்சப்பாட்டினுல் கண்ணீர் வடித்த கண்ணீரின் சொட்டும், மற்ருென்று அல்லாஹ்வின் பாதையில் போராடி வடிந்த உதிரத்தின் ஒரு சொட்டுமாகும். தழும்புகள், அல்லாஹ்வின் பாதையில் போராடி ஏற்பட்ட காயத்தின் தழும்பம் மற்ருென்று அவனது பரலான வணக்கங்களை நிறைவேற்றி (சஜ்தா, தஷஹ்ஹுத் காரணத்தினுல்) ஏற்பட்ட தழும்புமாகும்'' **அல்லாஹ்வின் பாதையில் ஈடுபட்டிருத்தல் எழுபது வருஷ வணக்கத்தைவிட சிறப்பானது.**

**ஹதீது 80:** ''நீர் இவ்வாறு செய்யாதீர். அல்லாஹ்வின் பாதையில் ஈடுபட்டிருக்கும் ஒருவரின் அந்தஸ்து அல்லாஹ்வினிடத்தில், அவர் தனித்து தனது இல்லத்தில் எழுபது வருஷகால இடைவிடா வணக்கம் புரிவதைவிட சிறப்புற்ருேங்கியதாகும்'' எனச் சத்தியத்திருநபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் பாதையில் அலைந்து திரிவதை விட்டொழித்து தனித்து ஒரு ஓடையண்டை வணக்கம் தவம் செய்துகொண்டிருக்க வேண்டுமென அபேக்ஷித்த ஒரு சஹாபியைப் பார்த்துக் கூறினுர்கள். **நூல்:** திர்மஜீ

ஆகவே இத்தகைய பேரானுக்கிரஹமிக்க, புனித சேவை புரிய, அல்லாஹ்வின் பொருத்தத்தை நாடி, நமது வாழ்க்கையை அர்ப்பணிக்க வேண்டுமென்றே, ஆருவது திட்டமாக ''தப்ரீகே - வக்த்'' நிர்ணயிக்கப்பட்டது. நாயன் நம் மனேவோரையும் இத்திருப்பணியில் ஈடுபட தவ்பீக் செய்தருள் புருவாஞகவும்.

**(ஆருவது திட்டம் முற்றிற்று.)**

★ ★ ★

## பிரிவு IV

இறுதியில் தப்லீகின் ஏழாவது திட்டமாக, "தர்கே லாய:ஃனீ" என்ற அனுவசிய, வீண்வியர்த்த, ஈடுபாடு களைத் தவிர்த்தலை, நிர்ணயித்துள்ளனர். ஆனால் இது ஒரு நிரந்தரத்திட்டமல்ல. இதை ஆருவது திட்டத்தின் உட்பிரிவாகவே கொள்ள வேண்டும். முதல் ஐந்து திட்டங்களையும் நம்மிலும், பிறரிலும் அமைக்கவேண்டிய சாதனமாக நிர்ணயிக்கப் பட்டிருக்கும், மஹோன்னதத் திட்டமாகிய அல்லாஹ்வின் பாதையில் புறப்படும் அவகா சத்தை வீண்வியர்த்த ஜோலிகளில் ஈடுபடுத்தி, அல்லாஹ் வின் அரும்பெரும் அனுக்கிரஹத்தை இழந்துவிடலாகாது, என்பதற்காக இதை ஆறுதிட்டங்களின் கண்காணிப்புத் திட்டமாக அமைக்கப்பட்டுள்ளது. எக்காரியத்திற்காக வேண்டி நேரம் ஒதுக்கப்பட்டதோ, அந்நேரத்தை அக் காரியத்திற் கப்புறப்பட்ட விஷயங்களில் ஈடுபடுத்து தலும் ஒரு கியானத் (மோசடி) தாகும். நேரத்தை வீணாக்கினதாகும். துஷ்பிரயோகம் செய்ததாகும்.

ஆகவே தப்லீக் திருப்பணியில் நேரத்தை, சேவை யின் கால அளவை, அல்லாஹ்வின் சம்பூரண அனுக் கிரஹத்தையும், திருப்பொருத்தத்தையும் அடையும் பொருட்டு, ரோம்பவும் கண்காணித்துப் பாதுகாக்க வேண்டும்.

(இரண்டாம் பாகம் ஏழு அத்தியாயங்களுடன் முற்றிற்று.)

★ ★ ★ ★

முடிவுரை

---

# துஆ

சர்வ வல்லோனாகிய அல்லாஹ்வே! புகழனைத் உனக்கே உரித்தாகுக! நினது திருநாமம் உன்னதமாகுக நினது திருச்சித்தத்தையும் திருப்பொருத்தத்தையும் மனு குலத்தின், இம்மையின் லட்சியமாக ஆக்கி அருள் புரிவ யாக! நினது நீதி நெறியை வையகத்தே வாழும் மாந் ரிடையே நிலைநிறுத்திவைப்பாயாக! நினது திருமொழியை உயர்த்தி யருள்புரிவாயாக! உம்மத்திடையே உம்மி ரசூ (ஸல்) அவர்களின் உச்ச ஒழுக்கங்களையும், உன்ன நடைமுறைகளையும், உயிர்ப்பித் தருள்புரிவாயாக! இ வெளியோனின் - இச்சிறு முயற்சியை அங்கீகரித்தருள்பு வாயாக! இவ்வெளியீட்டை முஸ்லிம்களிடையே, ச மார்க்க ஞானம் பரவுவதற்குரிய ஆதாரமாக ஆக்கி அரு புரிவாயாக! இவ்வருகதையற்றவனை, நினது இகபரபாக் கியங்களுக்கும், அருட்கொடைகளுக்கும், ஆளாக்கி, இப புனித கைங்கிரியத்தில் ஊக்கம், விடா முயற்சியுடன், ஈடுபடுவதற்குரிய அறிவு, ஆற்றல், ஆயுள், தரிபாடு யாவும் தந்தருட் புரிவாயாக.

அமீன் - ஆமீன் - யாரப்பல் ஆலமீன்
பிஹுர்மத்தி - சய்யிதில் முர்சலீன் (ஸல்)

கதபஹு அல்ஹகருல் இபாது

தர்பாரே
கஞ்சே சவாயீ,
நாகூர்,
26—1—'58.

ஷெய்கு முஹம்மத் அப்துல் கபூ
(ரப்பானீ) காதிரீ.

---

அருணா அச்சகம், திட்டச்சேரி.

# ஜம்யிய்யத் வெளியீடுகள்.

மௌலானா அவர்களின்
இதர சன்மார்க்க பிரசுரங்கள்

1 ரமலானின் சிறப்பு - (சுருக்கம்)

2 தொழுகையின் தேவை - (ஹனபீ)

3 புனித ஜீவியம்.
(நிஃமத்துல் உள்மா அலல்ஆலம்
பீ பஃஸத்தி
சய்யிதி வுலது ஆதம்.)

4 முன்தகபுல் அக்பார் மின்கலாமி
சய்யிதில் அப்ரார்.

5 அண்ணல் இரசூலின் அருபது
அரும் மொழிகள்.

6 முஹர்ரம் ஆஷூராவின் சிறப்பு.

7 ரமலானின் சிறப்பு.
(ஷைகுல் ஹதீது பளாயிலே ரமலான்
மொழி பெயர்ப்பு.)

8 ஹஜ்ஜூல் மப்ரூர்
(ஷைகுல் ஹதீது பஜாயிலே ஹஜ்
மொழி பெயர்ப்பு.)

9 பைகாமே தவ்ஹீத் - (ஏகத்துவத் தூது)
தப்லீகின் ஆறு திட்டங்கள்.

Wrapper Printed by Aruna Achagam, Titachery,